# தமிழரசு

1.6.1996 ரூ.3






# இந்த இதழில் ....


அண்ணாவின் கருத்துக்கனிகள் 2

3 'அமைச்சு' – ஓர் இலக்கியம் வரையும் இலக்கணம்

மனை வரி இனி இல்லை 4

6 மேதகு ஆளுநர் அவர்களின் உரை

கலைஞரின் குறளோவியம் 12

14 ரூ. 2450 கோடி செலவில் புதிய கார் தொழிற்சாலை

கிராம மகளிர் வேலைப் பளு குறைக்க 15

17 ரூ. 60 கோடியில் கடல்வாழ்வு உயிரினக் கண்காட்சி

சாப விமோசனம் – புதுமைப்பித்தன் 18

24 படமும் செய்தியும் 38

30 எல்லாரையும் கவர்ந்த முல்லாவின் கதை

மூக்கு – சில முக்கிய செய்திகள் 31

35 கடல் கடந்த நாடுகளின் கவிதைச் செல்வம்

கலீல் கிப்ரானின் 'குழந்தைகள்' 37

42 அறிவியல் உலகம்

சட்டமன்றத்தில் நகைச்சுவை 44

45 முதல்வர் இல்லத்தில் ஒரு புதுமை

இயற்கை அன்னையின் கோபம் 46

47 முதல்வரைச் சந்திக்க ...

ஆசிரியர் மடல் 48



தமிழரசு

திருவள்ளுவராண்டு - 2027

வைகாசித் திங்கள்: 19

மலர் :26 இதழ் : 23

1.6.1996

விலை ரூ. 3.



❑ கடிவாளம் சிறியது: ஆனால், குதிரை அதனிடம் படும்பாடு யாவரும் அறிந்ததுதான். மூக்கணாங்கயிறு தனது வால் பருமன் கூடத்தான் இல்லை; ஆனால், மாடு அதனிடம் அகப்பட்டால் அடங்கித்தான் ஆகும். அதைப் போலவே சிறிய சமூகமாயினும், அதற்கு ஏதேதோ மகத்துவத்தைக் கற்பித்து விட்டால், பிறகு அந்தச் சமூகத்தவரின் செல்வாக்கு நிச்சயம் வளரும்.

❑ போர் வீரர்கள் செல்லுமுன் கரடு முரடான பாதைகள் செப்பனிடப்படுவது போலே நம்முடைய எதிர்காலச் சந்ததி யருக்கு நாம் - முள்ளும், கல்லும், புதரும் போல நம் சமுதாயத்தில் உள்ள ஆபாசங் களையும், ஊழல்களையும் அறவே ஒழித்து நல்லதொரு சமுதாயத்தை உருவாக்கிக் கொடுத்துவிட்டுச் செல்லுவது நம்முடைய தலையாய கடமைகளில் ஒன்றாகும்.

❑ மெத்தை, தலையணைகள் தொடக் கத்தில் மென்மையாகவும் அழகாகவும் இருக்கும் நாளடைவில் மென்மை குறைந்து, அதன் இடுக்குகளில் தேள் குஞ்சுகள் குடிபுகவும் கூடும்; ஆகவே, படுக்கையை உதறிப்போடத்தான் வேண்டும்; அதைப் போலவே, நாம் மதங்களில் படிந்துள்ள மாசுகளைப் போக்கத்தான் வேண்டும்.

❑ மாங்கனிகளை நன்மை பயப்பவை, தீமை தருபவை, உபயோகமுள்ளவை, உபயோகமற்றவை என்ற முறையிலே பிரித்துப் பாகுபடுத்தித் தெளிந்து தேர்ந்து உண்பதைப்போல, இயற்றமிழில் அடங்கிய இலக்கியங்களையும், ஆய்ந்து தெளிந்து கற்றிடவேண்டும். காலத்திற்கும் கருத் திற்கும் ஒத்த உபயோகமான இலக்கியங் களையே படிக்க வேண்டும்.

❑ பிறருடைய ஆற்றலை, அதிலும் தன்னிடம் இல்லாத ஆற்றலை, மற்றவர்கள் பெற்றிருப்பதை உள்ளன்போடு ஏற்றுக் கொண்டு அதற்காக அவர்களைப் பாராட்டும் பண்பே உயர்ந்தது.

❑ நீதி நிலைக்க வேண்டும். அனை வருக்கும் சம வாய்ப்பு ஏற்படுத்தவேண்டும். ஒரு வகுப்பை அழுத்தி இன்னொரு வகுப்பு முன்னேறும் என்ற காட்டுமுறை அழிக்கப்பட வேண்டும்.

# அண்ணாவின் கருத்துக் கனிகள்

# அமைச்சு

## ஓர் இலக்கியம் வரையும் இலக்கணம்

''கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்டது அமைச்சு''

''தெரிதலும் தேர்ந்து செயலும் ஒருதலையாச்
சொல்லலும் வல்லது அமைச்சு''

''பழுதெண்ணும் மந்திரியின் பக்கத்துள் தெவ்வோர்
எழுபது கோடி உறும்''

இவ்வாறு அமைச்சு பற்றிச்
செவ்வாழைக் குறள் கருத்தில்
ஒவ்வாமல் போனவர்கள்
எவ்வாறு சிறப்புறுவர்?
மங்காத ஒளி விடுத்து மண்டபத்து இருட்டுக்குள்
வெளவாலைப் போன்றவர்தான் தொங்கிடுவர்
நிலமாளும் எங்களுக்குத்
தூங்காமை கல்வி துணிவுடைமை
நீங்காமல் இருக்க வேண்டு மென்றார்.



அமைச்சனுக்குத் தனியாக விளக்கம் ஏன்? பகை
அஞ்சாமை கொண்டிருந்தால் வீரனாவான் - பழி
அஞ்சாமை கொண்டிருந்தால் கயவனாவான்
அன்புடைமை காட்டுவதில் பெண்ணாவான்
நல்லோர் உழுவதிலும் சிறப்பாகச்
சொல்லோர் உழுவதிலும் செம்மைசால் உழவனாவான்
வாய்ப்பதிகம் எனினும் வருகின்ற
வசதிகளை இழப்பதிலே துறவியாவான்.

நகுதற் பொருட்டன்று நட்டல்
மேற் சென்றிடித்தல் பொருட்டெனும்
குறள் உணர்ந்த தன்மையினால்
திறன் வாய்ந்த நண்பனாவான்

பெண்ணுக்குப் பெருமை தற்காத்தல்
வீரனுக்கு விழுப்புண்ணில்
நண்பனுக்கு நன்றியிலே
துறவிக்குக் கல்லறையில்
கயவனுக்குக் காணும் பெருமையெலாம்
குயவனது மண்பாண்டம்!
என் பெருமை உம்மிடையே இருப்பதுதான்
இப்பெருமை நிலைத்தாலே போதுமென்பேன்!

*(சென்னை தமிழ் வட்டத்தின் சார்பில் 'அறுமறையில் அறுவர்' எனுந் தலைப்பில் நடைபெற்ற கவியரங்கில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர். ஆண்டு 1968)*

### வருவாய் இழப்பு பெரிதல்ல, மக்களின் மகிழ்ச்சியான நலவாழ்வே அரசின் குறிக்கோள்

# மனைவரி இனி இல்லை

## – மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. நாஞ்சில் கி. மனோகரன்

நத்தம் என்பது கிராமத்தில் மக்கள் வாழுகின்ற இடமாகும்.

**''நத்தம்போற் கேடும் உளதாகும் சாக்காடும்
வித்தகர்க்கு அல்லால் அரிது''**

என்ற குறளில் வள்ளுவப் பெருந்தகை நத்தம் என்ற சொல்லை, புகழ் என்ற பொருளில் குறிப்பிடுகின்றார்.

மனிதர் வாழும் இடம் புகழ் வழிந்தோடும் இடம் என்று, பெருமைக்குரிய நமது முன்னோர்கள் வாழும் இடத்தை நத்தம் என்று பெயர் வைத்தார்கள்! 'தோன்றின் புகழொடு தோன்றுக' என்ற வள்ளுவரின் இலக்கணத்திற்கு இலக்கியமாக வாழ்ந்தவர்கள் அல்லவா நம் தமிழ்ப் பெருங்குடி மக்கள்!!

இம்மக்கள் வாழும் பகுதிகள் கிராமக் கணக்குகளில் மொத்தமாக இதுகாறும் குறிப்பிடப்பட்டு வந்தது. ஒவ்வொரு குடிமகனும் அனுபவித்து வரும் உரிமைகளைத் தீர விசாரித்து முறைப்படி நிர்ணயம் செய்து பட்டா வழங்கப்படவில்லை. அதனால் அவர்களுக்கு அனுபோக உரிமை இருந்ததே தவிர மேற்படி நிலங்களை ஈடுகாட்டி வங்கிகளில் கடன் பெறவோ அல்லது வேறு நன்மைகள் பெறவோ இயலாமல் இருந்தது.

அதோடு, மக்கள் தொகை பெருக்கத்தின் காரணமாக விவசாய நிலங்கள் நத்தமாக மாற்றப்பட்டும், அதோடு திரைப்பட அரங்குகள், கடைகள், தொழிற்கூடங்கள், போன்ற வேளாண்மையற்ற பிற பயன்பாட்டிற்கும் மாற்றப்பட்டு வந்தன. உண்மை நிலை இவ்வாறிருக்க வருவாய்க் கணக்குகளில் மேற்படி நிலங்கள் வேளாண் நிலங்களாகவே குறிக்கப்பட்டு வந்தன. இந்நிலை சரி செய்யப்பட வேண்டும் என்பதற்காக, நத்தம் நிலவரித் திட்டத்தின் கீழ் நிலங்கள் குறித்த நாளது வரையிலான விபரங்களை கிராமக் கணக்குகளில் சரியாகப் பதிவு செய்து, மக்களின் சொத்துக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவும், அவர்கள் உரிமைகளை உறுதி செய்யவும் ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு பட்டாக்கள் வழங்கப்படுகின்றன. நத்தம் நில வரித் திட்டத்தின் பயன்களில் குறிப்பிடத் தகுந்த சிலவற்றைப் பட்டியலிட்டுக் காட்டுகின்றேன். அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக.

1. முதன் முறையாக குடியிருப்புப் பகுதிகளுக்கு நில வரித்திட்டம் அறிமுகப் படுத்தப்படுகிறது.
2. வீட்டுமனை உரிமையாளர்களது எல்லைகளைத் தெளிவாக வரையறுக்க உதவுகிறது.
3. புலப்படத்துடன் பட்டா வழங்கப் படுகிறது.
4. குளம், சாலை, தரிசு நிலம் உள்ளிட்ட அரசு மற்றும் சமூகத்திற்குச் சொந்தமான நிலங்கள் வரையறுக்கப்படுகிறது.
5. அதுபோலவே, கோவில், மசூதி, சர்ச் போன்ற மதச்சார்பு நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகள் ஆகியவற்றின் சொத்துரிமைகளுக்கும் எல்லைகள் வரையறுக்கப்படுகின்றன.

6. அரசு நிலங்கள் வரையறுக்கப்படுவதால் நத்தத்தில் உள்ள காலியிடங்கள் இனம் காணப்பட்டு அவற்றில் ஏற்படும் ஆக்ரமணங் களைக் கண்டுபிடிக்க இயலுகிறது, மேலும் அவற்றைத் தகுதி உடையவர்களுக்கு ஒப்படை செய்யவும் இயலும்.

7. கிராமங்களில் விவசாய நிலங்களிலும் குடியிருப்புகள் வரிவாக்கம் செய்யப் படுகின்றன. வணிக அலகுகளும் உருவா கின்றன. இத்தகைய மேம்பாடுகளை நத்தம் நிலவையால் கண்டறியப்பட்டு கிராமத்தின் உண்மை நிலை தெரிய வருகிறது.

8. உள்ளாட்சிகள் தமது வீட்டுவரி/சொத்து வரியைத் திருத்தியமைக்க உதவுகிறது.

9. நத்தம் பட்டா வழங்குவதன் மூலம் நில உடைமையாளர்கள் குறிப்பாக ஏழைகள் அரசிடமிருந்தும், நிதி நிறுவனங்களிடமிருந்தும் நிதி உதவி பெறவும், குடியிருப்புகளை மேம்படுத் தவும் இயலும்.

ஆனால், நத்தம் நிலவரித் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் பட்டாக்களுக்கு மனைவரி நிர்ணயம் செய்யப்பட்டு, அப்பட்டாக்கள் வழங்கும்போது வசூலிக்கப்பட்டு வந்தன. இது மட்டுமின்றி உள்ளூர் வரி மற்றும் உள்ளூர் மேல்வரி ஆகியவையும் முந்தைய அரசால் வசூலிக்கப்பட்டு வந்தன. ஒரு பட்டாவுக்கு குறைந்தது ரூபாய் பதினான்கு வசூல் செய்யப்பட்டது.



இது ஒரு மக்கள் நலத்திட்டமாகும். நத்தம் நிலவரித் திட்டத்தின் கீழ் பயன் பெறும் பெரும் பாலான பயனாளிகள் ஏழை மற்றும் நலிவுற் றோர் ஆவர். ஏழை மற்றும் நடுத்தர மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளுள் ஒன்றான வீட்டுமனைப் பட்டா வழங்குவது, திராவிட முன்னேற்றக் கழக அரசின் கொள்கைகளில் ஒன்றாகும். எனவே, இத்தகைய வசூல் எங்கள் கவனத்திற்கு வந்தபோது கழக ஆட்சியில் மனைவரி வசூல் ரத்து செய்யப்படும் என மக்களுக்கு வாக்குறுதி அளிக்கப்பட்டது.

''சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம்'' என்பதே கழக ஆட்சியின் குறிக்கோள். எனவே, ஏழை எளியோரின் நலனில் அக்கறை கொண்டுள்ள கழக அரசு பதவியேற்ற வுடன், ஏழை எளியோரைப் பாதிக்கும் மனைவரி, உள்ளூர் வரி மற்றும் உள்ளூர் மேல் வரி வசூலிப்பதை ரத்து செய்ய ஆணை வெளியிடப் பட்டது. இவ்வாணையே, மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் பதவியேற்றவுடன் கையெழுத்திட்ட முதல் கோப்பாகும் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

மனைவரி, உள்ளூர் வரி மற்றும் உள்ளூர் மேல் வரி ரத்து செய்ததால் ஒரு கோடியே இருபத்து ஐந்து இலட்சம் நபர்கள் பயனடைந் துள்ளனர். இதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு குறைந்தது ரூ. 14 கோடி வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. மேலும் சுமார் 23 கோடி ரூபாய் அளவில் மனைவரி நிலுவைத் தொகையையும் தள்ளுபடி செய்து கழக அரசு ஆணையிட்டுள் ளது. இவற்றால் அரசிற்குப் பெரும் வரி இழப்பு ஏற்பட்டாலும், பொருளா தாரத்தில் பின் தங்கிய ஏழை எளிய மக்கள் பயனடையும் வகையில் வெளியிடப்பட்ட முதல் ஆணை இது என்பது மன நிறைவு அளிக்கிறது.

வருவாய் இழப்பு பெரி தல்ல. மக்களின் மகிழ்ச்சியான நல வாழ்வே கழக அரசின் குறிக்கோள்.

# அறிஞர் அண்ணா வழியைப் பின்பற்றி நடைபெறும் ஏழை நடுத்தர மக்களின் அரசு இந்த அரசு

# திட்டப் பயன்கள் முழுமையாகவும் விரைவாகவும் மக்களுக்குக் கிடைத்திட வழி செய்வோம்!

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில்
மேதகு ஆளுநர் டாக்டர் எம். சென்னா ரெட்டி அவர்கள் ஆற்றிய உரை

தமிழ்நாட்டு மக்கள் ஓர் அமைதி நிறைந்த மௌனப் புரட்சியை நடத்தி, ஜனநாயக மாண்பினைப் பாதுகாத்ததின் காரணமாக இந்தப் பதினோராவது சட்டப் பேரவையின் உறுப்பினர்களாகப் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உங்கள் அனைவரையும் ''ஒளிபடைத்த கண்ணினாய் வா வா - உறுதி கொண்ட நெஞ்சினாய் வா வா!'' என மகாகவி பாரதியின் கவிதை வரிகளில் வரவேற்று வாழ்த்துகிறேன்.

### மக்களின் மகத்தான எழுச்சி

பெரும்பான்மை எனும் குறிப்பிட்ட எல்லைக்கோட்டையும் கடந்து மக்களின் மகத்தான எழுச்சி வெள்ளத்தினால் கிடைத்துள்ள இந்த வெற்றியை அளித்துள்ள மக்களின் எதிர்பார்ப்புகளை முழுமையாக நிறைவேற்றுவதற்குக் கடமைப்பட்டுள்ள இந்த அரசுக்கு உங்களின் அன்பானதும் அக்கறையுடையதுமான ஆர்வமிகு ஒத்துழைப்பு கிடைக்குமென்பதில் எனக்குச் சிறிதும் அய்யமில்லை.

### அமைதியாய் ஓர் ஆட்சி மாற்றம்

சிக்கனமாகவும், முறைகேடுகளுக்கு இடமளிக்காத வகையிலும், சீராகத் தேர்தல் நடைபெற விதிமுறைகளை வகுத்து அவற்றைக் கண்டிப்பாகக் கடைப்பிடித்திட, தேர்தல் ஆணையம் எடுத்த முயற்சிகள்; ஜனநாயக முறையினால் மட்டுமே அமைதியாக ஏற்படுத்தக் கூடிய ஆட்சி மாற்றத்துக்குத் தமிழ்நாட்டு மக்களுக்குப் பயன்பட்டுள்ளது.

### தேர்தல் முறை சீர்திருத்தம் நாடுதழுவிய கருத்து உருவாக்குவோம்

தேர்தல் முறையில் மேலும் தேவைப் படுகிற சீர்திருத்தங்கள் பல இருக் கின்றன. ஜனநாயகம் வழங்கும் உரிமையை வேடிக்கையாகவும் விபரீதமாகவும், சுயேச்சை வேட்



பாளர்கள் என்ற பெயரால் பயன்படுத்திக் கொள்கிற ஒரு நிலை வளர்ந்துள்ளதைக் கட்டுப் படுத்தி ஜனநாயகமும் கட்டுப்பாடும் காத்திடும் வண்ணம், அந்தச் சீர்திருத் தங்கள் அமைந்திட அனைத்துக் கட்சிகளுடன் கலந்து, நாடு தழுவிய அளவில் கருத்து உருவாக்கப்பட வேண்டும் என்பதைக் கோடிட்டுக் காட்ட இது தக்க தருணமெனக் கருதுகிறேன்.

**மாநில சுயாட்சி மத்தியில் கூட்டாட்சி**

இந்திய நாட்டின் ஒருமைப்பாடும் ஒற்றுமையும், உறுதியும் வலிவும் கொண்டு நிலைபெறுவதற்கு ஏற்ப, மாநிலங்களுக்குச் சுயாட்சியும், மத்தியில் கூட்டாட்சியும் கொண்ட அரசியலமைப்புச் சட்டப் பாது காப்பை இந்த அரசு, தொடர்ந்து வலியுறுத்தும்.

**மாநில ஆட்சி மொழிகள் அனைத்தையும் மத்தியஅரசின் ஆட்சிமொழி ஆக்கவேண்டும்**

தமிழ்நாட்டில் இந்தி திணிக்கப்பட மாட்டாது என்ற மறைந்த இந்தியப் பிரதமர் பண்டித நேரு அவர்களின் உறுதி மொழி இருந்தபோதிலும் நீண்ட காலமாகத் தீர்க்கப் படாமல் இருந்து வருகிற மொழிப் பிரச்சினைக்குத் தீர்வு காண ஒரே வழி, மாநிலங்களின் ஆட்சி மொழிகள் அனைத் தையும் மத்திய அரசின் ஆட்சிமொழிகளாக ஆக்குவது தான் என்பது இந்த அரசின் மொழிக் கொள்கையாகும். அதற்குக் காலம் தேவைப் படுமென்ற வாதம் வைக்கப்படு மேயானால் திராவிட மொழிக் குடும்பத்தில் மிகப் பழைமையானதும் சிறப்பு பெற்றதும் இலக்கிய இலக்கண வளம் மிக்கதுமான தமிழ் மொழியை முதல் கட்டமாக மத்திய ஆட்சி மொழிகளில் ஒன்றாக்கிட இந்த அரசு முயற்சி மேற்கொள்ளும்.

**தமிழ் ஆட்சி மொழித் துறைக்கு முதன் முறையாகத் தனி அமைச்சகம்**

நமது மாநிலத்தில் அனைத்து நிருவாக நடைமுறைகளிலும் குறிப்பிட்ட கால அளவுக்குள் தமிழ் மொழியை முழு அளவில் பயன்படுத்துவதற்கு முனைப்பான பணி மேற்கொள்ளப்படுவதற்கும் ''எங்கும் தமிழ் எதிலும் தமிழ்'' என்ற ஏற்றமிகு நிலையை உருவாக்குவதற்கும் தமிழ் ஆட்சி மொழித் துறை அமைச்சகம் ஒன்று முதல் தடவையாக தனியாகவே அமைக்கப்பட்டுள்ளதை மகிழ்ச்சி யுடன் தெரிவித்துக்கொள்கிறேன். அதே சமயத் தில் மொழிச் சிறுபான்மையினரின் நலன் களுக்கு எந்தக் குந்தகமும் விளையாமல் பாது காக்கப்படும் எனவும் உறுதியளிக்கிறேன்.

**சமுதாய நல்லிணக்கம் பேண அமைதிக் குழுக்கள் அமைத்துப் பணியாற்றுவோம்**

சமயச் சார்பின்மைக் கொள்கையையும் சமுதாய நல்லிணக்கத்தையும் போற்றிப் பேணுகின்ற இந்த அரசு, அனைத்து மதத்தினரும் அனைத்து வகுப்பினரும் ஒரு தாய் மக்கள் என்கிற உணர்வு தோன்றி நீடித்து நிலைப்பதற்கு உரிய நடவடிக்கைகளை, விரைந்து செயல் படுத்துவதுடன், தேவைப்படும் பகுதிகளில் எல்லாம் சமூகப் பெரியவர்களை யும் அனைத்துக் கட்சி முன்னோடிகளையும் கொண்ட அமைதிக் குழுக்களை அமைத்துப் பணி யாற்றும் என்ற உறுதிமொழியை அளிப்பதுடன், அனைத்து தரப்பு மக்களும் அதற்கான ஒத்துழைப்பை நல்குமாறும் கேட்டுக் கொள்கிறேன்.



## 69 சதவிகித இட ஒதுக்கிடு

1993-ல் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை, இம்மாநிலத்தில் வேலை வாய்ப்பிலும், கல்வி நிறுவனங்களிலும், 69 சதவீத இட ஒதுக் கீட்டைத் தொடருவதற்கு வகை செய்ய சட்டம் ஒன்றை இயற்றியது. அச்சட்டத்தை ஒருமன தாக நிறைவேற்றிக் கொடுத்த தமிழகக் கட்சிகள் அனைத்தும் மற்றும் அனைத்திந்தியக் கட்சி களும் அச்சட்டத்தை அரசியல் சட்டத்தின் ஒன்பதாவது விவர அட்டவணையில் சேர்க்க ஒத்துழைத்து, அதன் காரணமாக, 1.9.1994-ஆம் நாளன்று வெளியிடப்பட்ட 76-வது அரசமைப்புத் திருத்த சட்டத்தின்வாயிலாக, நீதிமன்றத் திற்குச் செல்ல முடியாத வகையில், அரசமைப்புச் சட்டத்தின் ஒன்பதாவது விவர அட்ட வணையில் இது சேர்க்கப்பட்டது. எனினும், 50 சதவீத ஒதுக்கீடு பின்பற்றப் பட்டிருந்தால், எவ ருக்கெல்லாம் மருத்துவ பொறியியல் கல்லூரி களில் இடம் கிடைத்திருக்குமோ அவர்களுக் கெல்லாம் இடம் வழங்கும் வகையில் இம் மாநிலத்தில் பொறியியல், மருத்துவ கல்லூரி களில் கூடுதல் இடங்களை உருவாக்க உச்ச நீதி மன்றம் ஆணையிட்டது. 69 சதவீத இட ஒதுக் கீட்டிற்கு வகை செய்யும் தமிழ்நாடு சட்டம் 1.9.1994லேயே அரசமைப்புச் சட்டத்தின் ஒன்பதாவது விவர அட்டவணையில் சேர்க்கப் பட்டிருந்த போதிலும்கூட, 23.9.1994 அன்று அன்றைய அரசின் சார்பில் உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட விளக்க மனுவில் இது பற்றித் தெரிவிக்கத் தவறிவிட்ட காரணத்தால், உச்சநீதிமன்றம் 50 சதவீத ஒதுக்கீட்டையே நிறைவேற்ற உத்தரவிட்டது. 1995-96ஆம் ஆண்டிற்கும் இதே போன்ற ஆணை ஒன்றை உச்ச நீதி மன்றம் பிறப்பித்தது. பிற்படுத்தப் பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், ஆதி திராவிடர், பழங்குடியினர் ஆகியோருக்கு வேலைவாய்ப்பிலும், கல்வியிலும், 69 சதவீத இடஒதுக்கீட்டை, வழங்கிட இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. இது குறித்து உச்ச நீதி மன்றத்தில் முனைப்புடன் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.




## மாநில மனித உரிமைகள் ஆணையம்

நமது மாநிலத்தில், குறிப்பாகப் புறநகர்ப் பகுதிகளில் சமூக விரோத ஆதிக்க சக்திகளால் மக்களின் உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பற்ற நிலை ஏற்பட்டு வன்முறைக் குற்றங்கள் பெருகி, மக்களுக்குக் காவல்துறை மீது இருந்த நம்பிக்கை தளர்ந்துள்ள சூழலை இந்த அரசு மிகுந்த கவலையுடன் கவனித்து, வேலியே பயிரை மேயும் வேதனையைத் தடுத்து நிறுத்தவும் - குற்றங்கள் புரிய

''அரசியல்'' என்பது ஒரு பாதுகாப்பான இடம் என்ற அவல நிலையை அறவே போக்கவும் - காவல் துறை என்பது மக்களுக்கு நல்லுறவுத் துறையாகவும், பாரபட்சமற்ற நடுநிலைத் துறையாகவும் மாற்றப்பட நடவடிக்கைகள் உரிய முறையில் எடுக்கப்படும். மனித உரிமைகள் மீறல் பற்றிய புகார்களை விசாரணை செய்ய ''மாநில மனித உரிமைகள் ஆணையம்'' அமைக்கப்படும்.

### ஊழல் குற்றங்களை விசாரிக்க அமைப்பு

தூய்மையான ஊழலற்ற ஆட்சிக்கு இத்தேர்தலில் மக்கள் தங்கள் பேராதரவைத் தந்துள்ளனர். அவர்களின் எதிர்பார்ப்புக்கு ஏற்ப நல்லாட்சி வழங்க இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. உயர் பதவியிலுள்ளோர், அதிகாரிகள் ஆகி யோருக்கு எதிரான ஊழல் குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணை செய்ய ''ஆம்புட்ஸ்மென்'' என்று சொல்லப்படும் விசாரணை அமைப்பு ஒன்றை உரு வாக்க மத்தியிலும், மற்ற மாநிலங்களிலும் முறையே உள்ள சட்ட முன்வடிவையும், சட்டங் களையும் பரிசீலித்து உரிய சட்டம் இயற்றப்படும்.

### உள்ளாட்சித் தேர்தல் உடனே வரும்

சிற்றூர், பேரூர், நகர்ப்புறப் பகுதிகளில் வாழ்கிற மக்கள், தங்களின் அடிப்படைத் தேவைகளுக்கான கோரிக்கைகளை எடுத்துக் கூறி நிறைவேற்றிக் கொள்ள தங்களால் தேர்ந் தெடுக்கப்பட வேண்டிய மக்கள் பிரதிநிதிகள் உள்ளாட்சி மன்றங்களில் இல்லாமல் தவித்திடும் குறையை நீக்கிட; சட்டமன்றப் பேரவையின் இந்த முதல் கூட்டத் தொட ரிலேயே உள்ளாட்சி மன்றத் தேர்தல் நடை பெறும் நாள் அறிவிக்கப்படுமென மக்களுக் களித்த வாக்குறுதி நிறைவேற்றப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறேன். உள்ளாட்சி அமைப்புகளுக்கு அவற்றின் பொறுப்புகளை நிறைவேற்று வதற்காக மாநில நிதிக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் போதிய நிதி ஆதாரங்கள் அளிக்கப்படும்.

### கூட்டுறவுச் சங்கங்களில் தேர்தல்

இந்த அரசு, கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தலை விரைவில் நடத்த ஆர்வமுடன் இருக்கிறது. முந்தைய ஆட்சிக்காலத்தில், தகுதியற்றவர்களை உறுப்பினர்களாகப் பல்வேறு கூட்டுறவுச் சங்கங்களில் சேர்த்துள்ளதால் அவர் களை நீக்கி தகுதியுள்ள உறுப்பினர்களைச் சேர்த்து கூட்டுறவுச் சங்கங் களுக்குத் தேர்தல் நடத்த லாம் என்று இந்த அரசு கருதுகிறது. கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல், முறைகேடுகளின்றி சரியாக நடைபெற, தகுதியற்ற உறுப்பினர்களை நீக்கி,

---

சட்ட மன்றத்தில் நகைச்சுவை

## தமிழக முதல்வர் கையில் தடி வைத்துக் கொள்ள வேண்டுமா?

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தில் தமிழ் மாநில காங்கிரஸ் உறுப்பினர் திரு அழகிரி பேசும் போது, 'ராஜாஜி முதல்வராக இருந்தபோது கையில் ஒரு தடி வைத்திருந்தார். அவர் முதுமைக்காக அந்தத் தடியை வைத்திருக்கவில்லை. தன் கட்சிக்காரர்கள் அரசு அலுவலகங்களில் சுற்றினால், இந்தத் தடியைக் கொண்டு விரட்டுவேன், என்றார் ராஜாஜி. அதுபோல முதல்வர் கருணாநிதி அவர்களுக்கும் தடி தேவைப்பட்டால் நாங்கள் தடி தரத் தயாராக இருக்கிறோம்' என்றார்.

இவ்வாறு அழகிரி சொன்னவுடன், அமைச்சர் நாஞ்சில் கி. மனோகரனைக் காண்பித்து, அவரிடமுள்ள தடியை வாங்கிக் கொள்கிறேன்! தடி தேவையில்லை என்று சைகை மூலம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூறிய போது அவையில் சிரிப்பலை அடங்க நெடுநேரம் ஆயிற்று.



தகுதியுள்ள உறுப் பினர்களைச் சேர்த்து நடத்த மேலும் 3 மாத கால அவகாசம் தேவைப்படுகிறது. இதற்காக இந்த அரசு உயர்நீதிமன்றத்தை உடனடியாக அணுகி அதன் ஆணைக்கு ஏற்ப காலக்கெடுவை நிர்ணயித்து அறிவிக்கும்.

**உரிய நாளில் உணவுப் பொருள் விநியோகம்**

தற்போது நியாய விலைக் கடைகளில் குடும்ப அட்டைகளுக்கு வழங்கப்படும் உணவுப் பொருள்கள், சரியான முறையில் விநியோகம் செய்யப்படுவதில்லை என்றும், குறிப்பிட்ட நாளில் வாங்கவில்லை என்றால், சமூக விரோதிகள் அவற்றைத் தவறாக தன்னலத்திற்காகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்றும், இதனைத் தடுக்க குடும்ப அட்டைகளுக்கு வழங்கப்படும் உணவுப் பொருள்கள் மக்களுக்கு ஒவ்வொரு மாதமும் அவர்களுக்கு எந்த நாள் வசதிப்படுகிறதோ அந்த நாளில் பெற்றுக் கொள்ளும் வகையில் கிடைக்கச் செய்ய வேண்டுமென்றும், மேலும் குறைவாக எடை போடுவது, முறைகேடாக வெளிச்சந்தையில் சரக்குகளை விற்பது போன்ற ஊழல்கள் தடுக்கப்பட வேண்டுமென்றும் எழுப்பப்படும் கோரிக்கைகளை ஏற்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**எழப்போகிறது இரண்டாவது பசுமைப்புரட்சி**

இந்த அரசு, இம்மாநிலத்தில் இரண்டாவது பசுமைப் புரட்சியை ஏற்படுத்த அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும். வேளாண் தட்ப வெப்ப மண்டலங்களுக்கு ஏற்ற அறிவியல் ரீதியான அணுகுமுறை, வேளாண்மைக் கொள்கையின் முக்கிய அம்சமாகத் திகழும். இயன்ற அளவிற்குப் புன்செய்ப் பகுதிகளுக்குப் பாசன வசதிகளை வழங்கவும் நன்செய்ப் பாசன ஏற்பாட்டு முறைகளை மேம்படுத்துவதன் மூலம் நன்செய் நிலங்களின் உற்பத்தித் திறனை உயர்த்தவும், பூச்செடி வளர்ப்பு, தோட்டக்கலை ஆகியவற்றை மேம்படுத்தவும் தனி முக்கியத்துவம் அளிக்கப்படும். நிர்ணயிக்கபட்டு அறிவிக்கப்படும் நேரங்களில் விவசாயத்துக்கு மின்சாரம் வழங்குவது உறுதி செய்யப்படும். காவிரிப் பாசனத்தைப் பெறுகிற உழவர்களின் நலனை முழுமையாகப் பாதுகாக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும். காவிரி நீர்ப் பிரச்சினைக்கு இறுதித் தீர்வு காண நடுவர் மன்றத்தின் முன் முனைப்புடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். நடுவர் மன்ற இடைக் கால ஆணையைச் செயல்படுத்துவது குறித்து தொடர் நடவடிக்கை எடுக்கப்படும்.

**முதலீட்டாளர் நேய அணுகுமுறை**

தற்போதைய பொருளாதாரச் சூழ்நிலைகளில், சிறந்த அடிப்படை வசதிகளும், கல்வித்திறனும், திறமை மிக்க மனித வளமும், பன்னாட்டு விமான நிலையமும், பல துறைமுகங்களும் கொண்ட தமிழகம் தொழில் வளர்ச்சியில் முன்னணி வகித்திருக்க வேண்டும். ஆனால், இம்மாநிலம் கடந்த ஐந்தாண்டுகளில் இந்த அனுகூலங்களை முறையாகப் பயன்படுத்திக்

கொள்ளவில்லை. இந்த அரசு ''முதலீட்டாளர் நேய (Investor friendly) அணுகுமுறை''யை மேற்கொண்டு, தமிழ்நாட்டிற்குத் தொழில் முதலீடுகள் அதிக அளவில் கிடைக்கப் பெறுவதற்கு ஆவன செய்யும். மற்றும் சிறு தொழில் முனைவோருக்குரிய சிறப்புக் கொள்கைத் திட்டம் ஒன்றும் உருவாக்கப் படும்.



## சுற்றுச்சூழல் பாதுகாப்பில் முழுக் கவனம்

இந்த அரசு, சுற்றுச் சூழலைப் பாது காப்பதில் முழுக்கவனம் செலுத்தும், ஆறு களையும், நீர் வழிகளையும், தொழிற் சாலைகள் மாசுபடுத்துவதைத் தடுக்க உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இந்த மாநிலத்தில் உள்ள தோல் பதனிடும் தொழிற் சாலைகளால் ஏற்படக்கூடிய தூய்மைக்கேடு, கடுமையான ஒரு பிரச்சினையாகும். அதே சமயத்தில், அத்தொழிற்சாலைகள் எண்ணற்ற தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக் கின்றன. எனவே, மக்களது நன்மை, சுற்றுச் சூழல் ஆகிய இரண்டையும் கருத்தில் கொண்டு இப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும். இதிலே விவசாயிகளின் நிலமும் பாதிக்கப்படா மல்', அதே நேரத்தில் குடிநீரும் பாதிக்கப்படா மல், தோல் தொழிற்சாலைகளிலே பணியாற்று கின்ற தொழிலாளர்களின் வாழ்க்கையும் பாதிக் கப்படாமல் அரசு முயற்சி எடுத்து முத்தரப்புப் பேச்சுவார்த்தை நடத்தி தீர்வுகாணப்படும்.

நகர்ப்பகுதி மேம்பாடு மற்றும் வீட்டு வசதித்துறைக்கு உரிய முக்கியத்துவம் அளிக் கப்படும். சென்னை, மதுரை உட்பட முக்கிய மாநகர்களில் உள்ள போக்குவரத்து நெரிசல், புறவழிச் சாலைகள் அமைக்கப்படுவதன் மூலம் குறைக்கப்படும். சென்னை மாநகரில், காய்கறி மொத்த விற்பனை அங்காடியைக் கோயம்பேட்டிற்கு விரைவில் மாற்ற நட வடிக்கை எடுக்கப்படும். சென்னைப் பெரு நகரின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்ய இருநூறு கோடி ரூபாயும், மற்றும் மதுரை, கோவை, திருச்சி, நெல்லை, சேலம் ஆகிய மாநகர் களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்ய மொத்தமாக நூறு கோடி ரூபாயும் ஒதுக்கப்படும் என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

## இந்த ஆண்டு இறுதிக்குள் சென்னைக்குக் கிருஷ்ணா நீர்

இந்த மாநிலத்தில் பாது காக்கப்பட்ட குடிநீரில்லாத குடி யிருப்புப் பகுதி இல்லை என்ற நிலை உருவாக் கப்படும். மற்றும் தொடக்கப் பள்ளிகள் அனைத்திற்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி களைச் செய்துகொடுக்க, இந்த அரசு நடவடிக் கைகள் எடுக்கும். அண்மையில் ஆந்திர மாநில முதலமைச்சர் மாண்புமிகு சந்திரபாபு நாயுடு அவர்களுடன் தமிழக முதலமைச்சர் மாண்புமிகு மு. கருணாநிதி அவர்கள் பேசியதைத் தொடர்ந்து இந்த ஆண்டு இறுதிக்குள் சென்னை மாநகருக்குக் கிருஷ்ணா நீர் வந்து சேரும் என்ற இனிய செய்தியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த மாநிலத்தில் மக்களுக்குத் தரமான அடிப்படை சுகாதாரம் மற்றும் மருத்துவ வசதிகளை அளிக்க இந்த அரசு உயர் முன்னுரிமை அளிக்கும். கிராமப்புறங்களில் அடிப்படை மருத்துவ வசதி தடையின்றி கிடைத்திட அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் மருத்துவர்கள் முறை யாகப் பணியாற்றுவது உறுதி செய்யப்படும்.

## தரைவரி ரத்து மகிழ்ச்சிக்கு வித்து

இது அறிஞர் அண்ணா வழியைப் பின்பற்றி நடைபெறும் ஏழை நடுத்தர

தொடர்ச்சி 40-ம் பக்கம்



# சான்றோன் தன் மகன் எனக்கேட்டாள்...

## ஈன்றபொழுதினும் பெரிதுவந்தாள்!

''நல்லம்மா! நல்லம்மா!'' என்று மகிழ்ச்சிபொங்கிட அழைத்தவாறு அந்த ஊர்ப் பெரியவர் உலகளந்தான் வீட்டுக்குள் நுழைந்தார். நரைத்த முடியும் நடுங்கும் உடலும் என்றாலும் உலகளந்தானின் குரலில் மட்டும் வலிமை குன்றிடவில்லை. ''என்னய்யா! இவ்வளவு பூரிப்பு?'' என்று நல்லம்மாள், மரியாதையுடன் எழுந்து உட்கார்ந்துகொண்டாள், கூடத்தில் விரித்திருந்த சற்றே கிழிந்த பட்டுப்பாயின் மீதுதான் அவள் படுத்திருந்தாள். காய்ச்சல், இருமல், உடலெங்கும் வலி – நோயின் தொல்லையால், அவள் அவதிப்பட்டுக் கொண்டிருந்தாள். அந்தத் துன்பத்துக்கிடையேயும் பெரியவருக்கு மரியாதை காட்ட வேண்டுமென்ற பண்பு அவளிடத்தில் இருந்தது.

''நீ எழுந்திருக்காதே! நோயாளி! சும்மா படுத்துக்கொள்!''

பெரியவர் அருகே அமர்ந்தார்.

நல்லம்மாளின் நோய்க்குக் காரணமில்லாமற் போகவில்லை.

ஒரு திங்களுக்கு முன்புதான் அவளது முப்பது வயது மகனை அவள் சாவின் வாயிலே அள்ளிக்கொடுக்க நேர்ந்தது. ஒரே மகன், அவனைத் தவிர அவளுக்கு யாரும் ஆதரவில்லை. அவளைக் கைம்பெண்ணாக்கிவிட்டு அவள் கணவன் பிரிந்து ஐந்தாண்டுகள் ஓடிவிட்டன. இப்போது மகனும் தந்தையைத் தொடர்ந்து சென்று தாயைத் தனியாக ஆக்கிவிட்டான்.

நல்லம்மாளின் மகன் கட்டிளங்காளை! அவன் இறந்துபோனது மட்டுமல்ல; அவன்மீது ஒரு பழியும் வந்து சேர்ந்தது.

வண்டியோட்டுவது அவன் தொழில். ஒரு நாள் கணவன் மனைவி இருவர் அவன் வண்டியிலேறி வேற்றூர் சென்றனர். இரவு நேரம்! மலைப்பாதை! தொலைவில் விலங்கினங்கள் உறுமும் ஒலிகூடக் கேட்டது! வண்டிக்குள் இருப்பவர்களோ செல்வந்தர் வீட்டுக்குரியவர்கள்; இளமை ததும்பும் வயதினர்; ஏராளமான நகைகளை அந்தப்பெண் சுமந்துகொண்டிருக்கிறாள்.

இரண்டு நாள் கழித்துச் செய்தி வந்தது, நல்லம்மாளின் மகன், தன் வண்டியில் வந்த கணவன் மனைவியைக் காட்டுப்பாதையில் மிரட்டி, ஆடவனைக் கொன்றுவிட்டு அந்த பெண்ணின் கற்பையும் சூறையாடிவிட்டு நகைகளைக் கொள்ளையடித்துக் கொண்டு ஓடிவிட்டான். அந்தப் பெண்ணும் கொல்லப்பட்டுவிட்டாள். இருவரைக் கொலை செய்துவிட்டு ஓடிய நல்லம்மாளின் மகனும், திருடிச்சென்ற நகைகளுடன் மலைப்பாதையில் கண் தெரியாமல் வழுக்கிக் கீழே உருண்டு செத்துவிட்டான். நகைகளைக் காவலர் மீட்டுவிட்டனர். இந்தச் செய்தியைக் கேட்டு அலறி விழுந்தவள்தான் அந்த அன்னை! பிறகு நோய் அவளைப் பிடித்துக்கொண்டது.

மகன் மறைந்தது மட்டுமல்ல; தீயவன் என்ற பெயரையல்லவா சூட்டிக்கொண்டு மறைந்துவிட்டான். ‘இதற்காகவா அவனை வலியையும் வேதனையையும் தாங்கிப் பெற்றேன். வளர்த்தேன்’ என்று நல்லம்மா புலம்பிக்கொண்டேயிருந்தாள்.

உலகளந்தான், நல்லம்மாளிடம் சொன்னார்; ‘‘அம்மா, நடந்த கதையே வேறாக இருக்கிறது. உன்மகன், வண்டியில் அவர்களை ஏற்றிக்கொண்டு மலைப்பாதையில் செல்லும்போது ஒரு கொள்ளைக்கூட்டம் வழிமறித்துவிட்டதாம். உடனே உன் மகன் கீழே குதித்து அந்தக் கயவர் கூட்டத்தை எதிர்த்திருக்கிறான், அவனை அந்தக் கூட்டத்தினர் சுற்றி வளைத்து வண்டிச்சக்கரத்திலேயே கட்டிப்போட்டு விட்டனர். பிறகு கணவன் மனைவியைக் கைப்பற்றினர். கணவன் கொலையுண்டான், அந்தப் பெண்ணைக் கற்பழித்தே கொன்று விட்டனர். அவள் அணிந்திருந்த நகைகளை மூட்டையாகக் கட்டி அந்தக் கூட்டத்தாரில் ஒருவன் தூக்கிச் செல்ல முனைந்தபோது, வண்டிச் சக்கரத்திலிருந்து தன்னை மீட்டுக்கொண்ட உன் மகன் ஒரேபாய்ச்சலில் அந்த நகை மூட்டையைப் பிடுங்கிக்கொண்டு ஊரை நோக்கி ஓடிவந்திருக்கிறான். கொள்ளைக் கூட்டம் அவனை அந்த இருட்டில் துரத்தியிருக்கிறது. வழி தெரியாமல் தடுமாறி உன் மகன் மலையிலிருந்து உருண்டிருக்கிறான்.’’

நல்லம்மாள், விழிகளை அகலத் திறந்து பெரியவரைப் பார்த்தாள்.

‘‘இவ்வளவும் உங்களுக்கு எப்படித் தெரியும்?

‘‘அந்தக் கொள்ளைக் கூட்டம் பிடிபட்டுவிட்டது. அந்தக் கூட்டத்தார், காவலர்களிடம் தெரிவித்த உண்மை இது! ‘என்னை நம்பி என் வண்டியில் வந்தவர்களின் உயிரைக் காப்பாற்ற முடியாவிட்டாலும் அவர்களின் உடைமையைக் காப்பாற்றியாவது அவர்களின் வீட்டில் கொண்டு போய்ச் சேர்க்கிறேன். என்னைத் தடுக்காதீர்கள்’ என்று கூறிவிட்டுத்தான் உன் மகன் அந்த நகை மூட்டையுடன் ஓடிவந்திருக்கிறான்.’’

நல்லம்மாளின் கண்களில் புதிய ஒளி! அவள் இதழ்களில் பரவசம்! முகத்தில் ஒரு மலர்ச்சி!

‘‘பெரியவரே! அவனைப் பெற்றபொழுது நான் எவ்வளவு மகிழ்ச்சியடைந்தேனோ! அதைவிட அதிகமான மகிழ்ச்சியை அவன் சான்றோன்தான் எனக் கேட்கும்போது அடைகிறேன்.’’ என்றாள்! நல்லம்மாள் அந்த மகிழ்ச்சிப் பெருக்குடனேயே பாயில் சுருண்டு படுத்தாள். பெரியவர், அவள் உடலைத் தொட்டு அசைத்துப் பார்த்தார். அந்த உடல் இனி அசையாத நிலை பெற்றுவிட்டது. அமைதியை அவள் உள்ளத்திற்கு வழங்கக்கூடிய அருமருந்தாக அந்த மகிழ்ச்சிச் செய்தி அவளுக்கு அமைந்தது போலும்!

**ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன்மகனைச்**
**சான்றோன் எனக்கேட்ட தாய்.**

**(டாக்டர் கலைஞர் அவர்களின்**
**குறளோவியத்தில் ஒரு காட்சி.)**



மாண்புமிகு முதல்வர்
அவர்கள் அறிவிப்பு

# ரூ. 2450 கோடி செலவில் புதிய கார் தொழிற்சாலை

கொரியா நாட்டைச்சேர்ந்த ஹுண்டாய் (HYUNDI) கார் தயாரிக்கும் தொழிற்சாலையின் தலைவர் திரு. பார்க் அவர்கள் தலைமையில் எக்சிகியூடிவ் மேனேஜிங் டைரக்டர் திரு.என்.எம்.கின் என்பவரும், இயக்குநர் திரு. ஓய்.கே. ஜங்க் என்பவரும் வந்திருந்தார்கள்.

தமிழக அரசின் தொழில்துறைச் செயலாளர்திரு. பி.சி. சிரியாக், இ.ஆ.ப. மற்றும் அரசு உயர்அலுவலர்கள்கலந்துகொண்டார்கள். அந்தத் தொழிற்சாலை சார்பில் சென்னையில் ஒரு கார் தொழிற்சாலை ஆரம்பிப்பது பற்றி விரிவாகப் பேசப்பட்டது. அதற்கான இடத்தை அவர்கள் கேட்டிருக்கிறார்கள். இரண்டு இடங்கள் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளன. இரண்டில் ஒரு இடத்தைத் தேர்வு செய்து கொள்கின்ற பொறுப்பு அவர்களிடம் விடப்பட்டிருக்கிறது.

கார் தொழிற்சாலை இங்கே ஆரம்பித்தால் ஆரம்பத்தில் ஆண்டு ஒன்றுக்கு ஒரு இலட்சம் கார்களும், தொடர்ந்து ஆண்டு ஒன்றுக்கு இரண்டு இலட்சம் கார்களும் தயாரிக்க இயலும். இந்தத் திட்டத்தின் ஆரம்ப முதலீடு 2450 கோடி ரூபாய் ஆகும். பின்னர், 1400 கோடி ரூபாய் செலவில் விரிவாக்கம் செய்யப்படும்.

நேரடியாக இரண்டாயிரம் முதல் மூவாயிரம் பேருக்கும் மற்றும் இருபதாயிரம் முதல் முப்பதாயிரம் பேர் வரைக்கும் வேறுவகையிலும் வேலை வாய்ப்பு அளிக்க இயலும்.

இந்தத் திட்டம் பற்றி 30.5.96 அன்று பேசப்பட்டுள்ளது. எந்த இடத்தில் எப்போது தொடங்கப்படும் என்ற விவரங்கள் பிறகு அறிவிக்கப்படும்.

– மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் 30.5.96 அன்று தலைமைச் செயலகத்தில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியிலிருந்து.

## தேசிய கரிம வாயுத்திட்டம்

# கிராம மகளிர் வேலைப் பளுவைக் குறைத்திடும் திட்டம்



இத்திட்டம், 1981-82ம் ஆண்டு முதல் தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும், மைய அரசின் முழு நிதி உதவியுடன் செயல்படுத்தப்படுகிறது. இது இருபது அம்சத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

**திட்டத்தின் நோக்கம்:**

* *இயற்கை எரிபொருள் குறையும் பொழுது மாற்று சக்தியாகப் பயன்படுத்துதல்; காடுகளில் உள்ள மரங்கள் அழியாமல் பாதுகாப்பதுடன் இயற்கைச் சூழலைப் பாதுகாத்தல்.*

* *மாசற்ற சுத்தமான நிலையில் எரிசக்தி உருவாக்குதல்; இரசாயன உரத்துக்குப் பதிலாக இயற்கையான சக்தி நிறைந்த உரம் உருவாக்குதல்*

* *கிராமத்தில் வாழும் மகளிர், குழந்தைகளின் அன்றாட வாழ்க்கையில் வேலைப் பளுவை குறைத்தல்*

* *கரிமவாயுக் கலனுடன் கழிப் பறையை இணைப்பதன் மூலம் சுகாதாரம் மற்றும் உடல் நலத்தை மேம்படுத்துதல்*

கரிமவாயுக் கலன் அமைக்க, பயனடைவோர் மானியங்கள் ரூ. 2000 முதல் ரூ. 2600 வரை, கலன்களின் அளவு மற்றும் பயனடைவோரின் வகை ஆகியவற்றின் அடிப்படையில் வழங்கப் பட்டு வந்தது. மேற்படி கலன் அமைக்க ஊக்கத்தொகையாக கலன் ஒன்றுக்கு ஊர்நல அலுவலருக்கு ரூ. 50-ம், சுழல்முறை முகவர்களுக்கு ரூ. 500-ம் வழங்கப்படுகிறது. கலன்கள் அமைக்க பயனடைவோர்களுக்கு வழங்கப் பட்ட மானியம் 1.4.95 முதல் மைய அரசால் நிறுத்தப்பட்டுவிட்டது. அதே சமயம் இத்திட்டத்தை ஏற்கும் வண்ணம் விளம்பரத்துக்கும், சந்தைப்படுத்துவதற்கும் மிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. இக்கலன்களை உபயோகிப்பவர்களுக்குத் தக்க பயிற்சியும், கலனமைப்பவர்களுக்குக் கட்டுமான மற்றும் பராமரிப்புப் பயிற்சியும் அளிக்கப்படுவதுடன் ஏற்கனவே பயிற்சி பெற்ற கொத்தனார்களுக்கும், புத்துணர்வுப் பயிற்சியும் இத்திட்டத்தில் அளிக்கப்படுகிறது.

1995-96ம் ஆண்டு முதல் சமவெளிப் பகுதிகளில் அமைக்கப்படும் கலன்களுக்கு ரூ. 2800-ம், சிறப்பு / மலைப்பகுதிகளில் அமைக்கப்படும் கலன்களுக்கு ரூ. 3400-ம், ஒட்டுமொத்த மானியமாக மைய அரசால் வழங்கப்படுகிறது. 31.3.95 முடிய, நிர்ணயிக்கப்பட்ட கலன்களில் 1,29,289 கலன்கள் அமைக்கப்பட்டுவிட்டன. 1995-96ம் ஆண்டுக்கு 7000 கலன்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டு, மைய அரசால் இது 8000 கலன்களாக உயர்த்தப் பட்டது. ஆனால் இவற்றில் 31.3.96 முடிய 6901 கலன்கள் அமைக்கப்பட்டுள்ளன.

# புகையில்லா அடுப்பு – மகளிருக்கு புன்னகை தரும் அடுப்பு



தேசிய மேம்படுத்தப்பட்ட சூளாத்திட்டம் 1983-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் முதல் மைய அரசின் மரபு சாரா எரிசக்தி வளங்கள் துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் தமிழ் நாட்டில் ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் மைய அரசின் நிதியுதவியோடு செயல்படும் திட்டமாகும்.

**திட்டத்தின் நோக்கம்:**

- மரங்களைப் பாதுகாத்து, விறகு களைக் குறைந்த அளவு பயன் படுத்துதல்
- காடுகள் அழிவதைத் தடுத்தல்
- தூய்மையானசுற்றுப்புறச்சூழலைப் பாதுகாத்து, குடிசைகளில் ஏற் படும் விபத்துக்களைத் தடுத்தல்
- சமையலறையிலிருந்து வெளிப் படும் புகையினைத் தவிர்ப் பதுடன், அதனால் பெண்களுக்கு உண்டாகும் உடல்நலக் கேடு களையும் தீங்குகளையும், வேலைப்பளுவையும் குறைத்தல்
- புகையில்லா அடுப்புகள் அமைத் தல், பழுது பார்த்தல், பராமரித்தல் போன்ற பணிகளில் சுயவேலை வாய்ப்புப் பணியாளர்களை ஈடுபடுத்துவதன் மூலம் கிராமப் புறங்களில் வேலை வாய்ப்புகளை உருவாக்குதல்

**மானியம் :**

மைய அரசு அவ்வப்போது நிர்ணயம் செய்வதற்கேற்ப புகையில்லா அடுப்பு ஒன்றை அமைப்பதற்கு ஏற்படும் செலவில் 33 சதவீதம் முதல் 50 சதவீதம் வரை இத்திட்டத்திற்கு மானியம் வழங்கப்படுகிறது. 1992-93ம் ஆண்டுக்கு முன் அதிகமாக இருந்த மானியத்தொகை படிப்படியாகக் குறைக்கப்பட்டுவிட்டது.

**இதுவரை அமைக்கப்பட்ட அடுப்புகள்**

இத்திட்டம் ஆரம்பித்த காலம் முதல், இந்த ஆண்டு வரை 19,90,008 புகையில்லா அடுப்புகள் நிறுவப்பட்டுள்ளன. இதற்காக மைய அரசு ஒதுக்கீடு செய்து ரூ. 1137.24 இலட்சம் செலவுசெய்யப் பட்டுள்ளது.

> **வாழ்க்கையில் கண்டிப்பாக ஓர் இலட்சியம் இருக்க வேண்டும், அப்படி இருந்தால்தான் செல்வத்தைத் தொடர்ந்து பெற முடியும்.**
>
> **— ஸ்டீவன்சன்**

> **எப்போதும் மகிழ்ச்சியுடன் இருக்க வேண்டும் என்கிற நல்ல எண்ணமே, நல்ல மனத் துணிவை வழங்கும் திறன் உடையது.**
>
> **– ஆல்பர்ட் சுவைட்சர்**

# முதல்வருடன் ஆஸ்திரேலிய நிறுவனம் ஆலோசனை
# சென்னை நகரில் ரூ. 60 கோடியில் கடல்வாழ் உயிரினங்கள் கண்காட்சி

சென்னை நகரில் ரூ. 60 கோடி செலவில் கடல் வாழ் உயிரினங்கள் கண்காட்சி அமைப்பது குறித்து ஆஸ்திரேலிய நிறுவனத்தைச் சேர்ந்த நிபுணர்கள் தமிழக முதல் அமைச்சர் கலைஞர் அவர்களைச் சந்தித்து ஆலோசனை நடத்தினார்கள்.

ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த ஸ்டுடியோ பெர்த் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் கோர்டன் குரோதர் தலைமையில் 4 பேர் கொண்ட குழுவினர் சென்னை வந்தனர். சென்னை நகரில் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் கடல் வாழ் உயிரினங்கள் கண்காட்சி அமைக்க இந்த நிறுவனம் திட்டமிட்டுள்ளது. ரூ. 60 கோடி செலவில் அமைக்கப்படும் இந்த உயிரினங்கள் கண்காட்சி, கடல்வாழ் உயிரினங்கள் தொடர்பாக ஆராய்ச்சி நடத்தவும் பயன்படும்.

இந்தத் துறையில் அனுபவம் உள்ள ஆஸ்திரேலிய நிறுவனம் உலக அளவில் 20 இடங்களில் இதுபோன்ற கண்காட்சியை நடத்தி வருகிறது.

ஆஸ்திரேலிய நிறுவனத்தின் தொழில் அதிபர் கோர்டன் குரோதர் மற்றும் அதன் நிர்வாகிகள் 24.5.96 அன்று தலைமைச் செயலகத்தில் இது குறித்து, தமிழக முதல் அமைச்சர் அவர்களைச் சந்தித்துப் பேசினார்கள். தமிழக அரசுடன் கூட்டு சேர்ந்து ஆஸ்திரேலிய நிறுவனம் இந்தக் கண்காட்சியை அமைக்கத் தயாராக இருக்கிறது என்று ஆஸ்திரேலிய நிபுணர்கள் தெரிவித்தனர். மாண்புமிகு தமிழக முதல் அமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் நிபுணர் குழுவுடன் பேசுகையில் இந்தத் திட்டத்தை வரவேற்பதாகத் தெரிவித்தார்.

மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர் திருமதி. ஜெனிபர் சந்திரன் மற்றும் அரசு உயர் அதிகாரிகள் உடன் இருந்தனர்.



## அட்டைப்பட விளக்கம்

முதல் அட்டை:

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட திரு பி.டி.ஆர். பழனிவேல்ராசன் அவர்களை, அவை முன்னவர் பேராசிரியரும், எதிர்க்கட்சித் தலைவர் திரு சொ. பாலகிருஷ்ணன் அவர்களும் பேரவைத் தலைவரது இருக்கையில் அமர்த்தும் காட்சி.

இரண்டாம் அட்டை:

மாண்புமிகு முதல்வர் அவர்கள் சட்டப் பேரவை உறுப்பினராகப் பதவியேற்கும் காட்சி.

நான்காம் அட்டை:

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மேதகு ஆளுநர் டாக்டர் எம். சென்னாரெட்டி அவர்கள் உரையாற்றுதல்.

# சாப விமோசனம்

## புதுமைப்பித்தன்

(ராமாயண பரிச்சயம் உள்ளவர்களுக்கு இந்தக் கதை பிடிபடாமல் (பிடிக்காமல் கூட) இருக்கலாம். அதை நான் பொருட்படுத்தவில்லை.)

**1**

சாலையிலே ஒரு கற்சிலை, தளர்ந்து நொடிந்து போன தசைக் கூட்டத்திலும், வீரியத்தைத் துள்ள வைக்கும் மோகன வடிவம்; ஓர் அபூர்வ சிற்பி பூலோகத்தில் இதற்காக வென்றே பிறந்து தன் கனவையெல்லாம் கல்லில் வடித்து வைத்தானோ என்று தோன்றும் அவ்வளவு லாகிரியை ஊட்டுவது. ஆனால் அந்தப் பதுமையில் கண்களிலே ஒரு சோகம் – சொல்லில் அடைபடாத சோகம் மிதந்து; பார்க்கின்றவர்களின் வெறும் தசை ஆசையான காமத்தைக் கொன்று அவர்களையும் சோகத்தில் ஆழ்த்தியது. அது சிற்பியின் அபூர்வக் கனவு அன்று. சாபத்தின் விளைவு. அவள்தான் அகலிகை.

அந்தக் காட்டுப் பாதையில் கல்லில் அடித்து வைத்த சோகமாக, அவளது சோகத்தைப் பேதமற்ற கண்கொண்டு பார்க்கும் துறவி போன்ற இயற்கையின் மடியிலே கிடக்கிறாள். சூரியன் காய்கிறது. பனி பெய்கிறது, மழை கொழிக்கிறது. தூசும் தும்பும் குருவியும் கோட்டானும் குத்துகின்றன; பறக்கின்றன. தன்



**ஒரு புராணக்கதை புதுமைப்பித்தனின் சமூகப்பார்வையில் புடம் போடப்படுகிறது. இராமன் கால்பட்டதும் கல் அகலிகை யானது! புதுமைப்பித்தன் கைபட்டதும் அகலிகை கதை புதுக்கோலம் பெற்றது! பல்லாயிரம் ஆண்டுக் கதையை, அண்மைக் காலம் எப்படி உரசிப் பார்த்திருக்கிறது என்பதை, நிகழ்காலம் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக, இந்த விழிப்புணர்வுக் கதை 'தமிழரசு' இதழில் வெளியிடப்படுகிறது.**

நினைவற்ற தபஸ்வியாக கல்லாக - கிடக்கிறாள்.

சற்றுத் தூரத்திலே ஒரு கரையான் புற்று. நிஷ்டையில் ஆழ்ந்து தன் நினைவகற்றித் தன் சோகத்தை மறந்து தவம் கிடக்கிறான் கோதமன். இயற்கை, அவனையும் அபேதமாகத்தான் போஷிக்கிறது.

இன்னும் சற்றுத் தூரத்திலே இந்தத் தம்பதிகளின் குடும்பக் கூடு கம்பமற்று வீழ்ந்ததுபோல, இவர்களுக்கு நிழல் கொடுத்த கூரையும் தம்பம் இற்று வீழ்ந்து பொடியாகிக் காற்றோடு கலந்து விட்டது. சுவரும் கரைந்தது. மிஞ்சியது திரடுதான், இவர்கள் மனசில் ஏறிய துன்பத்தின் வடுப்போலத் தென்பட்டது அது.

தூரத்திலே கங்கையின் சல சலப்பு, அன்னை கங்கை, இவர் களது எல்லையற்ற சோகத்தை அறிவாளோ என்னவோ!

இப்படியாக ஊழி பல கடந்தன, தம்பதிகளுக்கு

ஒருநாள்......

முற்பகல் சூரிய ஒளி சற்றுக் கடுமைதான். என்றாலும் கொடி களின் பசுமையும் நிழலும், இழைந்து வரும் காற்றும், உலகின் துன்பத்தை மறைக்க முயன்று நம்பிக்கையையும் வலுவையும் தரும் சமய தத்து வம்போல, இழைந்து மனசில் ஒரு குளுமையைக் கொடுத்தன.

ஆண் சிங்கம்போல, மிடுக்கு நடை நடந்து, எடுத்த கருமம் முற்றியதால் உண்ட மகிழ்ச் சியை மனசில் 'அசை போட்டுக் கொண்டு' நடந்து வருகிறான் விசுவாமித்திரன், மாரீசனும் சுவாகுவும் போன இடம் தெரியவில்லை. தாடகை என்ற கிழட்டுக் கொடுமை நசித்து விட்டது. நிஷ்டையில் ஆழ்ந் தும், எரியோம்பியும் தர்ம விசாரத்தில் ஈடுபட்டிருப்பவர் களுக்கு நிம்மதியைத் தரும் சாதனமாகத் தன்னை ஆக்கிக் கொண்டதில் திருப்தி.



**... எப்போதோ ஒருநாள் நின்று கல்லான இதயம் சிலையுள் துடிக்கிறது. போன இடத்தில் நின்று இறுகிப்போன ரத்தம் ஓட ஆரம்பிக்கிறது ...**

அடிக்கடி திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொள் கிறான். பார்வையில் என்ன பரிவு! இரண்டு குழந்தைகள் ஓடிப்பிடித்து விளையாடி வரு கின்றன. அவர்கள் வேறு யாருமல்ல; அவதார சிசுக்க ளான ராம லஷ்மணர்களே. அரக்கர் நசிவை ஆரம்பித்து வைத்துவிட்டு, அதன் பொறுப்புத் தெரியாமல் ஓடிப்பிடித்து வருகி றார்கள்.

ஓட்டம் புழுதியைக் கிளப்பு கிறது. முன்னால் ஓடி வருகிறான் லஷ்மணன்; துரத்தி வருபவன் ராமன். புழுதிப் படலம் சிலையின் மீது படிகிறது....

என்ன உத்ஸாகமோ என்று உள்ளக்குதூகலிப்புடன் திரும்பிப் பார்க்கிறார் விசுவாமித்திரர். பார்த்தபடியே நிற்கிறார்.

புழுதிப் படலம் சிலையின் மீது படிகிறது.

எப்போதோ ஒருநாள் நின்று கல்லான இதயம் சிலையுள் துடிக்கிறது. போன இடத்தில் நின்று இறுகிப்போன ரத்தம் ஓட ஆரம்பிக்கிறது. கல்லில் ஜீவ உஷ்ணம் பரவி உயிருள்ள தசைக் கோளமாகிறது. பிரக்ஞை வருகிறது.

கண்களை மூடித் திறக் கிறாள் அகலிகை பிரக்ஞை தெரிகிறது. சாப விமோசனம்! சாப விமோசனம்!

தெய்வமே! மாசுபட்ட இந்தத் தசைக்கூட்டம் பவித்திரம் அடைந்தது.

தனக்கு மறுபடியும் புதிய வாழ்வை கொடுக்க வந்த தெய்வீக புருஷன் எவன்? அந்த குழந்தையா?

அவன் காலில் விழுந்து நமஸ்கரிக்கிறாள். ராமன் ஆச் சர்யத்தால் ரிஷியைப் பார்க் கிறான்.

விசுவாமித்திரருக்குப் புரிந்து விட்டது. இவள் அகலிகை, அன்று இந்திரனுடைய மாய வேஷத்துக்கு ஏமாறிய பேதை,

கணவன் மீதிருந்த அளவுக்குள் அடங்காத பாசத்தின் விளைவாக, தன் உடம்பை, மாய வேஷத்தால் ஏமாறி, மாசு படுத்திக் கொண்டவள்; கோதமனின் மனைவி. அவ்வளவையும் ராமனிடம் சொல்கிறார். அதோ நிற்கும் புற்று இருக்கிறதே; அதில், வலை முட்டையில் மோனத்தவம் கிடக்கும் பட்டுப் பூச்சிப்போல தன்னை மறந்து நிஷ்டையில் ஆழ்ந்து இருக்கிறான். அதோ அவனே எழுந்து விட்டானே!

நிஷ்டை துறந்த கண்கள் சாணை தீட்டிய கத்திபோல் சுருள்கின்றன. உடலிலே, காயகற்பம் செய்ததுபோல் வலுபின்னிப் பாய்கிறது. மிடுக்காக, பெண்ணின் கேவலத்திலிருந்து விடுவித்துக்கொள்ள முடியாதவனைப் போலத் தயங்கித் தயங்கி வருகிறான்.

மறுபடியும் இந்தத் துன்ப வலையா? சாபவிமோசனத்துக்குப் பிறகு வாழ்வு எப்படி என்பதை மனசு அப்பொழுது நினைக்கவில்லை. இப்பொழுதோ அது பிரம்மாண்டமான மதிலாக அவனது வாழ்வைச் சுற்றியே மண்டலிக்கிறது. அவள் மனமும் மிரளுகிறது.

ராமனுடைய கல்வி, தர்மக் கண் கொண்டு பார்த்தது. தெளிவின் ஒளி பூண்டது. ஆனால் அநுபவச் சாணையில் பட்டை பிடிக்காதது; வாழ்வின் சிக்கலின் ஒவ்வொரு நூலையும் பின்னலோடு பின்னல் ஓடியாமல் பார்த்த வசிஷ்டனுடைய போதனை. ஆனால் சிறுமையை அறியாதது. புது வழியில் துணிந்து போக அறிவுக்குத் தெம்பு கொடுப்பது.

உலகத்தின் தன்மை என்ன, இப்படி விபரீதமாக முறுக்கேறி உறுத்துகிறது! மனசுக்கும் காரண சக்தியின் நிதானத்துக்கும் கட்டுப்படாமல் நிகழந்த ஒரு காரியத்துக்கா பாத்திரத்தின் மீது தண்டனை? ''அம்மா!'' என்று சொல்லி அவள் காலில் விழுந்து வணங்குகிறான் ராமன்.

இரண்டு ரிஷிகளும், (ஒருவன் துணிச்சலையே அறிவாகக் கொண்டவன்; மற்றவன் பாசத்தையே தர்மத்தின் அடித்தளமாகக் கண்டவன்) சிறுவனுடைய நினைவுக் கோணத்தில் எழுந்த கருத்துக்களைக் கண்டு குதூகலிக்கிறார்கள். எவ்வளவு லேசான, அன்புமயமான, துணிச்சலான உண்மை!

''நெஞ்சினால் பிழை செய்யாதவளை நீ ஏற்றுக் கொள்ளுவதுதான் பொருந்தும்'' என்றான் விசுவாமித்திரன் மெதுவாக.



**... அவளை அன்று விலை மகள் என்று சுட்டது, தன் நாக்கையே பொசுக்க வைத்து விட்டது போல இருக்கிறது கோதமனுக்கு ...**

குளுமை பூண்ட காற்றில் அவனது வாதக் கரகரப்பு ரஸ பேதம் காட்டுகிறது.

கோதமனும், அவன் பத்தினியும், அந்தத்தம்பம மற்றுத் திரடேறிப்போன மேடும் அவ்விடத்தைவிட்டு அகலவில்லை. முன்பு உயிரற்றிருந்த இடத்தில் ஜீவ களை துவள நினைத்தது.

சாட்டையின் கொடுக்கைப் போலப் போக்கை மாற்றியமைக்க வந்த சக்திகள் அவ்விடம் விட்டுப் பெயர்ந்து விட்டன. மிதிலைக்குப் பொழுது சாயும் பொழுதாவது போக வேண்டாமா? மணவினை, இரு கைகளை நீட்டி அழைக்கிறது.

கோதமனுக்கு அவளிடம் முன்போல் மனக் களங்கமின்றிப் பேச நாவெழவில்லை. அவளை அன்று விலை மகள் என்று சுட்டது, தன் நாக்கையே பொசுக்க வைத்துவிட்டது போல இருக்கிறது. ''என்ன பேசுவது? என்ன பேசுவது?''

''என்ன வேண்டும்?'' என்றான் கோதமன், அறிவுத் திறம் எல்லாம் அந்த உணர்ச்சிச் சுழிப்பிலே அகன்று பொருளற்ற வார்த்தையை உந்தித் தள்ளியது.

''பசிக்கிறது'' என்றாள் அகலிகை, குழந்தை போல.

அருகிலிருந்த பழனத்தில் சென்று கனிவர்க்கங்களைச் சேகரித்து வந்தான் கோதமன். அன்று, முதன் முதல் மணவினை நிகழ்ந்த புதிதில் அவனுடைய செயல்களில் துவண்ட ஆசையும் பரிவும் விரல்களின் இயக்கத்தில் தேக்கத்தில் காட்டின.

'அந்த மணவினை' உள்ளப் பரிவு பிறந்த பின்னர்ப் பூத்திருந்தாலும், ஏமாற்றின் அடிப்படையில் பிறந்தது தானே! பசுவை வலம் வந்து பறித்து வந்தது தானே!' என்று கோதமனுடைய மனசு, திசை மாறித் தாவித் தன்னையே சுட்டுக் கொண்டது.

அகலிகை பசி தீர்ந்தாள்.

அவர்கள் மனசில் பூர்ண மான கனிவு இருந்தது. ஆனால் இருவரும் இருவிதமான மனக் கோட்டைகளுக்குள் இருந்து தவித்தார்கள்.

கோதமனுக்குத் தான் ஏற்ற வளா என்பதே அகலிகையின் கவலை.

அகலிகைக்குத் தான் ஏற்ற வனா என்பதே கோதமனின் கவலை.

சாலையோரத்தில் பூத்திருந்த மலர்கள் அவர் களைப் பார்த்துச் சிரித்தன.

## 2

அகலிகையின் விருப்பப் படி, ஆசைப்படி அயோத்தி வெளி மதில்களுக்குச் சற்று ஒதுங்கி, மனுஷ பரம்பரையின் நெடிபடாத தூரத்தில், சரயூ நதிக்கரையிலே ஒரு குடிசை கட்டிக்கொண்டு தர்ம விசாரம் செய்து கொண்டிருந்தான், கோதமன். இப்பொழுது கோதமனுக்கு அகலிகை மீது பரிபூர்ண நம்பிக்கை. இந்திரன் மடிமீது அவள் கிடந்தால்கூட அவன் சந்தேகிக்க மாட்டான். அவ்வளவு பரிசுத்தவதியாக நம்பினான் அவன். அவளது சிற்றுதவி இல்லாவிடின் தனது தர்ம விசாரம் தவிடு பொடியாகி விடும் என்ற நிலை அவனுக்கு ஏற்பட்டது.

அகலிகை அவனை உள்ளத் தினால் அளக்க முடியாத ஓர் அன்பால் தழைக்கவைத்தாள். அவனை நினைத்து விட்டால், அவள் மனமும் அங்கங்களும் புது மணப் பெண்ணுடையன போலக்கனிந்து விடும். ஆனால் அவள் மனசில் ஏறிய கல் அகலவில்லை. தன்னைப் பிறர் சந்தேகிக்காதபடி விசேஷமாகக் கூர்ந்து பார்க்கக்கூட இடங் கொடாதபடி நடக்க விரும்பி னாள். அதனால் அவள் நடையில் இயற்கையின் தன்மை மறந்து இயல்பு மாறியது. தன்னைச் சூழ நிற்பவர்கள் யாவருமே இந்திரர்களாகத் தென்பட்டார்கள்; அகலிகைக்குப் பயம் நெஞ்சில் உறையேறி விட்டது. அந்தக்காலத்திலிருந்த பேச்சும் விளையாட்டும் குடியோடிப்போயின. ஆயிரம் தடவை மனசுக்குள் திருப்பித் திருப்பிச் சொல்லிப் பாடம் பண்ணிக்கொண்டு, அந்த வார்த்தை சரிதானா என்பதை நாலு கோணத்திலிருந்தும்



**... ஏறிட்டுச் சாதாரண மாகப் பார்க்கிறவர்களை யும் களங்கமற்ற கண் கொண்டு பார்க்கக் கூசியது. குடிசை யில் ஒளிந்து கொண்டாள் அகலிகை ...**

ஆராய்ந்து பார்த்துவிட்டுத்தான் எதையும் சொல்லுவாள். கோதமன் சாதாரணமாகச் சொல்லும் வார்த்தைகளுக்குக் கூட உள்ளர்த்தம் உண்டோ என்று பதைப்பாள்.

வாழ்வே அவளுக்கு நரக வேதனையாயிற்று.

அன்று மரீசி வந்தார். முன்னொருநாள் ததீசி வந்தார், மதங்கரும் வாரணாசி செல்லும் போது கோதமனைக் குசலம் விசாரிக்க எட்டிப்பார்த்தார். அவர்கள் மனசில் கனிவும் பரிவும் இருந்த போதிலும் அகலிகையின் உடம்பு குன்றிக் கிடந்தது. மனசும் கூம்பிக் கிடந்தது. அதிதி உபசாரங்கூட வழுவி விடும்போல இருந்தது. ஏறிட்டுச் சாதாரணமாகப் பார்க்கிறவர்களையும் களங்க மற்ற கண் கொண்டு பார்க்கக் கூசியது. குடிசையில் ஒளிந்து கொண்டாள்.

கோதமனுடைய சித்தாந்தமே இப்பொழுது புதுவித விசார ணையில் திரும்பியது. தர்மத்தின் வேலிகள் யாவும் மனமறிந்து செல்பவர்களுக்கே சுயப் பிரக்ஞை இல்லாமல் வழு ஏற்பட்டு, அதனால் மனுஷ வித்து முழுவதுமே நசித்து விடும் என்றாலும், அது பாபம் அல்ல; மனலயிப்பும், சுயப் பிரக்ஞையுடன் கூடிய செயலீடு பாடுமே கறைப்படுத்துபவை. தனது இடிந்து போன குடிசை யில் மறுபடியும் பிறர் கூட்டி வைத்த ஒரு தன்மையில் இருந்துகொண்டு புதிய கோணத் தில் தன் சிந்தனையைத் திருப்பி விட்டான் கோதமன். அவனு டைய மனசில் அகலிகை மாசு அற்றவளாகவே உலாவினாள்; தனக்கே அருகதை இல்லை சாபத்தீயை எழுப்பிய கோபமே தன்னை மாசுபடுத்திவிட்டது என்று கருதினான்.

சீதையும் ராமனும் உல்லாச மாகச்சமயாசமயங்களில் அந்தத் திசையில் ரத்மூர்ந்து வருவார் கள். அவதாரக் குழந்தை, கோதமனின் மனசில் லக்ஷ்ய வாலிபனாக உருவாகித் தோன்றி னான். அவனது சிரிப்பும் விளை யாட்டுமே தர்மசாஸ்திரத்தின் தூண்டாவிளக்குகளாகச் சாயனம் (வியாக்கியானம்) பண்ணின. அந்த இளம் தம்பதிகளின் பந்தந்தான் என்ன? அது

கோதமனுக்குத் தனது அந்தக் காலத்து வாழ்வை ஞாபகப் படுத்தும்.

அகலிகையின்மனப்பாரத்தை நீக்க வந்த மாடப்புறா சீதை. அவளது பேச்சும் சிரிப்பும், தன் மீதுள்ள கறையைத் தேய்த்துக் கழுவுவன போல் இருந்தன அகலிகைக்கு. அவள் வந்த போதுதான் அகலிகையின் அதரங்கள் புன்சிரிப்பால் நெளியும், கண்களில் உல்லாசம் உதயவொளி காட்டும்.

வசிஷ்டரின் கண் பார்வையிலே வளரும் ராஜ்யலஷ்யங்கள் அல்லவா? சரயூ நதியின் ஓரத்தில், ஒதுங்கிய இரு தனி வேறு உலகங்களில் சஞ்சரிக்கும் ஜீவன்களிடையே பழைய கலகலப்பைத் தழைக்க வைத்து வந்தார்கள்.

அகலிகைக்கு வெளியே நடமாடி நாலு இடம் போவதற்குப் பிடிப்பற்று இருந்தது. சீதையின் நெருக்கமே அவளது மனச் சுமையை நீக்கிச் சற்றுத் தெம்பை அளித்தது.

பட்டாபிஷேக வைபவத்தின் போது அயோத்திக்கு வருவதாக ஒப்புக்கொண்டிருந்தாள். ஆனால், அரண்மனைக்குள் ஏற்பட்ட உணர்ச்சிச் சுழிப்புக்குத்தான் என்ன வலிமை! ஒரே மூச்சில் தசரதன் உயிரை வாங்கி ராமனைக் காட்டுக்கு விரட்டி, பரதனைக் கண்ணீரும் கம்பலையுமாக நந்திக்கிராமத்தில் குடியேற்றி விட்டது.

மனுஷ அளவைகளுக்குள் எல்லாம் அடைபடாத அதீத சத்தி, ஏதோ உன்மத்த வேகத்தில் காயுருட்டிச் சொக்கட்டான் ஆடியதுபோல், நடந்து முடிந்து விட்டது.

வசிஷ்டர்தான் என்ன, சர்வ ஜாக்கிரதையோடு மனுஷ தர்மத்தின் வெற்றியாக ஒரு ராஜ்யத்தை ஸ்தாபிக்கக் கண்ணில் எண்ணெயூற்றி வளர்த்தார். அவருடைய கணக்குகள் யாவும் தவிடுபொடியாகி, நந்திக் கிராமத்தில் நின்றெரியும் மினுக்கு வெளிச்சமாயிற்று.

சரயூ நதிக்குடிசை மறுபடியும் தம்பமற்று விழுந்தது என்றே சொல்ல வேண்டும். கோதமன்தர்மவிசாரமெல்லாம் இந்தப் பேய்க் காற்றில் சூறை போயிற்று. மனசில் நம்பிக்கை வறண்டு சூன்யமாயிற்று.



**... ஜலத்தை ஏந்தி நின்ற அகலிகையின்உதடுஅசைந்தது "எனக்கு இங்கு இருப்புக் கொள்ளவில்லை, மிதிலைக் குப் போய்விடுவோமே" ...**

அகலிகைக்கோ? அவளது துன்பத்தை அளந்தால் வார்த்தைக்குள் அடைபடாது. அவளுக்குப் புரியவில்லை, நைந்து ஓய்ந்து விட்டாள். ராமன் காட்டுக்குப் போனான்; அவன் தம்பியும் தொடர்ந்தான்; சீதையும் போய்விட்டாள். முன்பு கற்சிலையாகிக் கிடந்தபோது மனசு இருண்டு கிடந்த மாதிரி ஆகிவிட்டது. ஆனால் மனப் பாரத்தின் பிரக்ஞை மட்டும் தாங்க முடியவில்லை.

கருக்கலில் கோதமர் ஜப தபங்களை முடித்துக் கொண்டு கரையேறிக் குடிசைக்குள் நுழைந்தார்.

அவர் பாதங்களைக் கழுவுவதற்காகச் செம்பில் ஜலத்தை ஏந்தி நின்ற அகலிகையின் உதடு அசைந்தது.

''எனக்கு இங்கு இருப்புக் கொள்ளவில்லை, மிதிலைக்குப் போய்விடுவோமே.''

''சரி, புறப்படு; சதானந்தனையும் பார்த்து வெகு நாட்களாயின'' என்று வெளியே இறங்கினார் கோதமர்.

இருவரும் மிதிலை நோக்கி நடந்தார்கள். இருவர் மனசிலும் பளு குடியேறி அமர்ந்திருந்தது. கோதமர் சற்று நின்றார்.

பின்தொடர்ந்து நடந்துவந்த அகலிகையினுடைய கையை எட்டிப் பிடித்துக் கொண்டார்; நடந்தார்; ''பயப்படாதே'' என்றார்.

இருவரும் மிதிலை நோக்கி நடந்தார்கள்.

## 3

பொழுது புலர்ந்து விட்டது. கங்கைக் கரைமேல் இருவரும் சென்று கொண்டிருக்கிறார்கள்.

யாரோ ஆற்றுக்குள் நின்று கணீரென்று குரலில்காயத்திரியைச் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

ஜபம் முடியும் மட்டும் தம்பதிகள் கரையில் எட்டிக் காத்து நின்றார்கள்.

''சதானந்தா!'' என்று கூப்பிட்டார் கோதமர்.

''அப்பா.. அம்மா!'' என்று உள்ளத்தின் மலர்ச்சியைக் கொட்டிக் காலில் விழுந்து நமஸ்கரித்தார் சதானந்தர்.

**இருளும் ஒளியும்**

**மனிதன் இரண்டு வகைப் படுகிறான். ஒருவன் இருளில் விழித்திருக்கிறான்; மற்றவன் ஒளியில் தூங்குகிறான்.**

**–கலீல் கிப்ரான்**

அகலிகை அவனை மனசால் தழுவினாள். குழந்தை சதானந்தன் எவ்வளவு அன்னியனாகி விட்டான், தாடியும் மீசையும் வைத்துக் கொண்டு ரிஷி மாதிரி!

கோதமருக்கு மகனது தேஜஸ் மனசைக் குளுமை யூட்டியது.

சதானந்தன் இருவரையும் தன் குடிசைக்கு அழைத்துச் சென்றான்.

சிரம பரிகாரம் செய்து கொள்ளுவதற்கு வசதி செய்து வைத்துவிட்டு, ஜனகனது தத்துவ விசார மண்டபத்துக்குப் புறப்படலானான்.

கோதமரும் உடன் வருவதாகப் புறப்பட்டார். மகனுக்கு அவரை அழைத்துச் செல்லுவதில் பிரியந்தான். நெடுந் தூரத்துப் பிரயாணமாச்சேஎன்று ரத்த பந்தத்தின் பரிவால் நினைத்தான். ஊழிகாலம் நிஷ்டையில் கழித்தும் வாடாத தசைக் கூட்டமா, இந்த நடைக்குத் தளர்ந்துவிடப் போகிறது? அவனுக்குப்பின் புறப்பட்டார். அவருடைய தத்துவ விசாரணையின் புதிய போக்கை நுகர ஆசைப்பட்டான் மகன்.

மிதிலையின் தெருக்கள் வழியாகச் செல்லும்போது, அயோத்தியில் பிறந்த மனத் தொய்வும் சோகமும் இங்கும் படர்ந்திருப்பதாகப் புலப் பட்டன கோதமருக்கு, அடக்கி விட்ட பெருமூச்சு, காற்றினூனே கலந்து இழைந்தது.

ஜனங்கள் போகிறார்கள், வருகிறார்கள்; காரியங்களைக் கவனிக்கிறார்கள்; நிஷ்காம்ய சேவைபோல எல்லாம் நடக்கிறது; பிடிப்பு இல்லை; லயிப்பு இல்லை.

திருமஞ்சனக் குடம் ஏந்திச் செல்லும் அந்த யானையின் நடையில் விறுவிறுப்பு இல்லை; உடன் செல்லும் அர்ச்சகன் முகத்தில் அருளின் குதூகலிப்பு இல்லை.

இருவரும் அரசனுடைய பட்டி மண்டபத்துக்குள் நுழைந் தார்கள். சத்சங்கம் சேனா சமுத்திரமாக நிறைந்திருந்தது. இந்த அங்காடியில் ஆராய்ச்சி எப்படி நுழையும் என்று



**...''வசிட்டன்தான்கட்டிய ராஜ்யத்தில் உணர்ச்சிக்கு மதகு அமைக்கவில்லை'' என்றான் ஜனகன் ...**

பிரமித்தார் கோதமர். அவர் நினைத்தது தவறுதான்.

ஜனகன் கண்களில் இவர்கள் உடனே தென்பட்டார்கள்.

அவன் ஓடோடியும் வந்து முனிவர்க்கு அர்க்கியம் முதலிய உபசாரங்கள்செய்வித்து அழைத்துச் சென்று அவரைத் தன்பக்கத்தில் உட்கார வைத்துக் கொண்டான்.

ஜனகனுடைய முகத்தில் சோகத்தின் சோபை இருந்தது. ஆனால் அவன் பேச்சில் தழுதழுப்பு இல்லை; அவனுடைய சித்தம் நிதானம் இழக்கவில்லை என்பதைகாட்டியது.

என்னத்தைப் பேசுவது என்று கோதமர் சற்றுத் தயங்கி னார்.

''வசிட்டன் தான் கட்டிய ராஜ்யத்தில் உணர்ச்சிக்கு மதகு அமைக்கவில்லை'' என்றான் ஜனகன், மெதுவாகத் தாடியை நெருடிக் கொண்டு.

ஜனகரின் வாக்கு, வர்மத் தைத் தொட்டுவிட்டது.

''உணர்ச்சியின் சுழிப்பிலே தானே உண்மை பிறக்கும்'' என்றார் கோதமர்.

''துன்பமும் பிறக்கும். உணர்ச்சியைப் பயன்படுத்திக் கொள்ளத் தெரியாது போனால் ராஜ்யத்தைக்கட்ட ஆசைப்படும் போது அதற்கும் இடம் போட்டு வைக்க வேண்டும்; இல்லா விட்டால் ராஜ்யம் இருக்காது'' என்றான் ஜனகன்.

''தங்களதோ?'' என்று சந்தேகத்தை எழுப்பினார். கோதமர்.

''நான் ஆளவில்லை; ஆட்சியைப் புரிந்து கொள்ள முயலு கிறேன்'' என்றான் ஜனகன்.

இருவரும் சற்று நேரம் மௌனமாக இருந்தார்கள்.

''தங்களது தர்ம விசாரணை எந்த மாதிரியிலோ?'' என்று விநயமாகக் கேட்டான் ஜனகன்.

''இன்னும் ஆரம்பிக்கவே இல்லை; இனிமேல்தான் புரிந்து

**காலத்தின் மதிப்பு.**

**காலத்தின் மதிப்பு உனக்குத் தெரியுமா? அப்படியானால், உனக்கு வாழ்வின் மதிப்பும் தெரியும்.**

**– நெல்சன்**

# படமும் செய்தியும்...



பேரறிஞர் அண்ணா அவர்களின் துணைவியார் திருமதி. இராணி அம்மையாரின் திருவுருவப் படத்தை அவரது இல்லத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் திறந்து வைத்தார்கள். (20.5.96)



தமிழ்கச் சட்டப்பேரவைத் துணை சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப் பட்ட திரு. பரிதி இளம்வழுதிக்கு மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள், பொன்னாடை அணிவித்து வாழ்த் தினார். (23.5.96)



சென்னை தலைமைச்செயலகத்தில் தமிழக அமைச்சரவை முதல் கூட்டம் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர். கலைஞர். மு. கருணாநிதி அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் அனைத்து அமைச்சர் பெருமக்களும் கலந்து கொண்டனர். (22.5.96)



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையில், ''கொடுஞ்செயல் எதிர்ப்பு நாள்'' உறுதிமொழி எடுத்துக்கொள்ளப்பட்டது. (21.5.96)

'தமிழரசு' தேர்தல் சிறப்பிதழை மாண்புமிகு செய்தி - விளம்பரத்துறை அமைச்சர் திரு. வ. முல்லை வேந்தன் அவர்களிடம் இருந்து (23.5.96) மாண்புமிகு முதல்வர் அவர்கள் பெற்றுக் கொண்டார்.



கொள்ள முயல வேண்டும்; புதிர்கள் பல புலன்களை யெல்லாம் கண்ணியிட்டுக்கட்டு கின்றன'' என்று சொல்லிக் கொண்டே எழுந்தார் கோதமர்.

மறுநாள் முதல் அவர் ஜனகன் மண்டபத்துக்குப் போக வில்லை. புத்தியிலே பல புதிர்கள் ஹிமாசலத்தைப் போல் ஓங்கி நின்றன. தனிமையை விரும்பினார். ஆனால் நாடிச் செல்லவில்லை. அகலிகை மனசு ஒடிந்து விடக்கூடாதே!

மறுநாள் ஜனகன், ''முனீசுவரர் எங்கே?'' என்று ஆவலுடன் கேட்டான்.

''அவர் எங்கள் குடிசைக்கு எதிரே நிற்கும் அசோக மரத்தடியில்தான் பொழுதைக் கழிக்கிறார்'' என்றார் சதானந்தர்.

''நிஷ்டையிலா?''

''இல்லை; யோசனையில்''

''அலை அடங்கவில்லை'' என்று தனக்குள்ளே மெதுவாக சொல்லிக் கொண்டான் ஜனகன்.

அகலிகைக்கு நீராடுவதில் அபாரமோகம். இங்கே கங்கைக் கரையருகே நிம்மதி இருக்கும் என்று தனியாக உதய காலத் திலேயே குடமெடுத்துச் சென்று விடுவாள்.

இரண்டொரு நாட்கள் தனியாக, நிம்மதியாகத் தனது மனசின் கொழுந்துகளைத் தன்னிச்சையோடு படரும்படி விட்டு, அதனால் சுமை நீங்கிய தாக ஒரு திருப்தியுடன் குளித்து முழுகி விளையாடிவிட்டு நீர் மொண்டு வருவாள்.

**சொல்லும் சிந்தனையும்**

**சொற்கள் நம் சிந்தனையின் உடைகள். அவற்றைக் கந்தல் களாகவும், கிழிசல்களாகவும், அழுக்காகவும் உடுத்தக்கூடாது.**

**– செஸ்டர் பீல்டு**

இது நீடிக்கவில்லை.

குளித்துவிட்டுது திரும்பிக் குனிந்த நோக்குடன், மனசை இழைய விட்டுக்கொண்டு நடந்து வந்து கொண்டிருந்தாள்.

எதிரே மெட்டிச் சப்தம் கேட்டது. ரிஷிபத்தினிகள் யாரோ! அவர்களும் நீராடத்தான் வந்து கொண்டிருந்தார்கள், அவளைக் கண்டதும் பறைச்சி யைக் கண்டது போல ஒடி விலகி, அவளை விறைத்துப் பார்த்து விட்டுச் சென்றார்கள்.



**... தெய்வமே! சாப விமோசனம் கண்டாலும் பாபவிமோசனம் கிடையாதா?'' என்று தேம்பினாள் அகலிகை...**

''அவள்தான் அகலிகை'' என்பது தூரத்தில் கேட்டது. கோதமனுக்கு அன்று அடி வயிற்றில் பற்றிக் கொண்டு பிறந்த சாபத் தீயைவிட அதிக மாகச்சுட்டன அவ்வார்த்தைகள்.

அவள் மனசு ஒரேயடியாகச் சுடுகாடு மாதிரி வெந்து தகித்தது. சிந்தனை திரிந்தது. ''தெய்வமே! சாப விமோசனம் கண்டாலும் பாபவிமோசனம் கிடை யாதா?'' என்று தேம்பினாள்.

யந்திரப்பாவை போல அன்று கோதமருக்கும் சதானந்த ருக்கும் உணவு பரி மாறினாள். 'மகனும் அன்னியனாகி விட்டான்; அன்னியரும் விரோதிகளாகி விட்டார்கள்; இங்கென்ன இருப்பு?' என்பதே அகலிகையின் மனசு அடித்துக் கொண்ட பல்லவி.

**மரமும் அறிவும்**

**பச்சை மரத்தை வேலைக்கு அதிகமாக பயன்படுத்தக் கூடாது. அது போலத்தான் பண்படாத அறிவும்.**

**– ஹோம்ஸ்**

கோதமர் இடையிடையே பிரக்ஞை பெற்றவர் போல் ஒரு கவளத்தை வாயிலிட்டு நினை வில் தோய்ந்திருந்தார்.

இவர்களது மன அவசத்தால் ஏற்பட்ட பளு சதானந்தனையும் மூச்சு திணற வைத்தது.

பளுவைக் குறைப்பதற்காக, ''அத்திரி முனிவர் ஜனகனைப் பார்க்க வந்திருந்தார். அகத்திய ரைப் பார்த்துவிட்டு வருகிறார் மேருவுக்குப் பிரயாணம். ராமனும் சீதையும் அகத்தியரைத் தரிசித்தார்களாம். அவர்கள் இருவரையும், 'நல்ல இடம் பஞ்சவடி, அங்கே தங்குங்கள்' என்று அகத்தியர் சொன்னாராம் அங்கே இருப்பதாகத்தான் தெரிகிறது'' என்றான் சதானந்தன்.

''நாமும் தீர்த்தயாத்திரை செய்தால் என்ன?'' என்று அகலிகை மெதுவாகக் கேட்டாள்.

''புறப்படுவோமா?'' என்று கைகளை உதறிக் கொண்டு எழுந்தார் கோதமர்.

''இப்பொழுதேயா?'' என்றான் சதானந்தன்.

''எப்பொழுதானால் என்ன?'' என்று கூறிக் கொண்டே,

மூலையிலிருந்த தண்டு கமண்டலங்களை எடுத்துக்கொண்டு வாசலை நோக்கினார் கோதமர்.

அகலிகை பின்தொடர்ந்தாள்.

சதானந்தன் மனம் தகித்தது.

**4**

பொழுது சாய்ந்து, ரேகை மங்கிவிட்டது. இருவர் சரயூ நதிக் கரையோரமாக அயோத்தியை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள்.

பதினான்கு வருஷங்கள் ஓடிக் காலவெள்ளத்தில் ஐக்கியமாகி விட்டன. அவர்கள் பார்க்காத முனிபுங்கவர் இல்லை; தரிசிக்காத க்ஷேத்திரம் இல்லை, ஆனால் மன நிம்மதி மட்டிலும் அவர்களுக்கு இல்லை.

வலுவற்றவனின் புத்திக்கு எட்டாது நிமிர்ந்து நிற்கும் சங்கரனுடைய சிந்தனைக் கோயில் போல, திடமற்றவர்களின் கால்களுக்குள் அடைபடாத கைலயங்கிரியைப் பனிச் சிகரங்களின்மேல் நின்று தரிசித்தார்கள்.

தமது துன்பச் சுமையான நம்பிக்கைவறட்சியை உருவகப் படுத்திய பாலையைத் தாண்டினார்கள்.

தம் உள்ளம்போலக் கொழுந்துவிட்டுப் புகை மண்டிச் சாம்பலையும், புழுதியையும்சுமக்கும்எரிமலைகளை வலம் வந்து கடந்தார்கள்.

தமது மனம்போல ஓயாது அலைமோதிக் கொண்டு கிடக்கும் சமுத்திரத்தின் கரையை எட்டிப் பின்னிட்டுத் திரும்பினார்கள்.

தம் வாழ்வின் பாதை போன்ற மேடு பள்ளங்களைக் கடந்து வந்துவிட்டார்கள்.

'இன்னும் சில தினங்களில் ராமன் திரும்பி விடுவான்; இனிமேலாவது வாழ்வின் உதய காலம் பிறக்கும்' என்ற ஆசைதான் அவர்களை இழுத்து வந்தது.

பதினான்கு வருஷங்களுக்கு முன் தாம் கட்டிய குடிசை இற்றுக் கிடந்த இடத்தை அடைந்தார்கள்.

இரவோடு இரவாக, குடியிருக்கவசதியாகக் கோதமர் அதைச்செப்பனிட்டார். வேலை முடியும் போது உதய வெள்ளி சிதித்தது.

இருவரும் சரயூவில் நீராடித் திரும்பினார்கள்.



**... ''குழந்தை வைத்த நெருப்பு ஊரைச் சுட்டு விட்டால் குழந்தையைக் கொன்று விடுவதா?'' என்றாள் கைகேயி ...**

கணவனாருக்குப் பணிவிடை செய்வதில் முனைந்தாள் அகலிகை. இருவரது மனசும் ராமனும் சீதையும் வரும் நாளை முன்னோடி வரவேற்றது. இருந்தாலும் காலக்களத்தின் நியதியை மனசைக் கொண்டு தவிர, மற்றபடி தாண்டிவிட முடியுமா?

ஒரு நாள் அதிகாலையில் அகலிகை நீராடச் சென்றிருந்தாள்.

அவளுக்குமுன், யாரோ ஒருத்தி விதவை குளித்து விட்டுத் திரும்பி வந்து கொண்டிருந்தாள்; யார் என்ற அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை; ஆனால் எதிரே வந்தாள், அடையாளம் கண்டுகொண்டு விட்டாள். ஓடோடியும் வந்து அகலிகையின் காலில் சர்வாங்கமும் தரையில் பட விழுந்து நமஸ்கரித்தாள்.

தேவி கைகேயி! தன்னந் தனியாக, பரிசனங்களும் பரிவாரமும் இல்லாமல், துறவியாகி விட்டாளே!

குடத்தை இறக்கி வைத்து விட்டு அவளை இரு கைகளாலும் தூக்கி நிறுத்தினாள். அவளுக்குக் கைகேயியின் செயல் புரியவில்லை.

''தர்ம ஆவேசத்திலே பரதன் தன்னுடைய மனசில் எனக்கு இடம் கொடுக்க மறந்து விட்டான்'' என்றாள் கைகேயி.

குரலில் கோபம் தெறிக்கவில்லை; மூர்த்தன்யம் துள்ளவில்லை. தான் நினைத்த கைகேயி வேறு; பார்த்த கைகேயி வேறு. படர்வதற்குக் கொழுகொம்பற்றுத் தவிக்கும் மனசைத்தான் பார்த்தாள் அகலிகை.

இருவரும் தழுவிய கை மாறாமல், சரயூவை நோக்கி நடந்தார்கள்.

''பரதனுடைய தர்ம வைராக்கியத்துக்கு யார்காரணம்?'' என்றாள் அகலிகை. அவளுடைய உதட்டின் கோணத்தில் அநு

**புத்தகம்**

**புத்தகங்கள் மற்றவர்களை நீங்கள் புரிந்துகொள்ளும்படி மட்டும் செய்யவில்லை உங்களை நீங்களே அறிந்து கொள்ளவும் செய்யும்.**

**– அகஸ்டின்**

**மனிதன்**

**மனிதனை மனிதனாக்குபவை உதவிகளும் வசதிகளும் அல்ல; இடையூறுகளும் துன்பங்களுமே!**

**– மாத்யூஸ்**

தாபம் கனிந்த புன்சிரிப்பு நெளிந்து மறைந்தது.

''குழந்தை வைத்த நெருப்பு ஊரைச் சுட்டு விட்டால் குழந்தையைக் கொன்று விடுவதா?'' என்றாள் கைகேயி.

குழந்தைக்கும் நெருப்புக்கும் இடையில் வேலி போடுவது அவசியந்தான் என்று எண்ணினாள் அகலிகை. ''ஆனால் எரிந்தது எரிந்ததுதானே?'' என்று கேட்டாள்.

''எரிந்த இடத்தைச் சுத்தப் படுத்தாமல் சாம்பலை அப்படியே குவித்து வைத்துக்கொண்டு சுற்றி உட்கார்ந்திருந்தால் மட்டும் போதுமா?'' என்றாள் கைகேயி.

''சாம்பலை அகற்றுகிறவன் இரண்டொரு நாட்களில் வந்து விடுவானே'' என்றாள் அகலிகை.

''ஆமாம்'' என்றாள் கைகேயி. அவள் குரலில் பரம நிம்மதி தொனித்தது. ராமனை எதிர் பார்த்திருப்பது பரதனல்ல; கைகேயி.

மறுநாள் அவள் அகலிகையைச் சந்தித்த பொழுது முகம் வெறிச்சோடியிருந்தது; மனசு நொடிந்து கிடந்தது.

''ஒற்றர்களை நாலு திசைகளிலும் விட்டு அனுப்பிப் பார்த்தாகி விட்டது. ராமனைப் பற்றி ஒரு புலனும் தெரியவில்லை. இன்னும் நாற்பது நாழிகை நேரத்துக்குள் எப்படி வந்துவிடப் போகிறார்கள்? பரதன் பிராயோபவேசம் செய்யப் போகிறானாம். அக்கினி குண்டம் அமைக்க ஏற்பாடு செய்வது வருகிறான்'' என்றாள் கைகேயி.

பரதன் எரியில் தன்னை அவித்துக் கொள்ளுவது தன் மீது சுமத்தப்பட்ட ராஜ்ய மோகத்துக்குத் தக்க பிராய சித்தம் என்று அவள் கருதுவதுபோல் இருந்தது பேச்சு.

சற்று நிதானித்து, ''நானும் எரியில் விழுந்து விடுவேன்; ஆனால் தனியாக, அந்தரங்கமாக'' என்றாள் கைகேயி, அவள் மனசு வைராக்கியத்தைத் தெறித்தது.



**... ''பரதன் தர்மத்துக்குத் தான் கட்டுப்படுவான்; வசிட்டருக்குக் கட்டுப்பட மாட்டான்'' என்றாள் கைகேயி ...**

பதினான்கு வருஷங்கள் கழித்து மறுபடியும் அதே உணர்ச்சிச் சுழிப்பு. அயோத்திக்க ஏற்பட்ட சாபத் தீ நீங்கவில்லையா?

அகலிகையின் மனசு அக்குத் தொக்கு இல்லாமல் ஓடியது. தனது காலின் பாபச் சாயை என்றே சந்தேகித்தாள்.

''வசிட்டரைக் கொண்டாவது அவனைத் தடை செய்யக் கூடாதோ? என்றாள் அகலிகை.

''பரதன் தர்மத்துக்குத்தான் கட்டுப்படுவான்; வசிட்டருக்குக் கட்டுப்படமாட்டான்'' என்றாள் கைகேயி.

''மனிதருக்குக் கட்டுப்படாத தர்மம், மனித வம்சத்துக்குச் சத்துரு' என்று கொதித்தாள் அகலிகை.

தன்னுடைய கணவர் பேச்சுக்குப் பரதன் ஒரு வேளை கட்டுப்படக்கூடாதோ என்ற நைப்பாசை, மறுபடியும் அயோத்தியில் துன்பச் சக்கரம் சுழல ஆரம்பித்துவிடக் கூடாதே என்ற பீதி.

கோதமன் இணங்கினான். ஆனால் பேச்சில் பலன் கூடவில்லை.

பரதனை உண்டு பலி கொள்ள அக்கினி தேவன் விரும்பவில்லை. அனுமான் வந்தான்; நெருப்பு அவிந்தது. திசைகளின் சோகம் கரை உடைந்த குதூகல வெறியாயிற்று. தர்மம் தலை சுற்றியாடியது.

வசிட்டனுக்கும் பதினான்கு வருஷங்கள் கழித்த பிறகாவது கனவு பலிக்கும் என்று மீசை மறைவில் சிரிப்புத் துள்ளாடியது.

இன்ப வெறியில் அங்கே நமக்கு என்ன வேலை என்று திரும்பி விட்டான் கோதமன்.

சீதையும் ராமனும் தன்னைப் பார்க்க வருவார்கள் என்று அகலிகை உள்ளம் பூரித்தாள்.

**இளமையின் இரகசியம்!**

**எப்போதும் இளமையாக இருப்பதற்கான இரகசியம் இதுதான். எந்த உணர்ச்சிக்கும் வசமாகிவிடாமல் இருப்பதே அது.**

**– ஆஸ்கார் ஒயில்ட்**

வரவேற்பு ஆரவாரம் ஒடுங்கியதும் அவர்கள் இருவரும் பரிவாரம் இன்றி வந்தார்கள்.

ரதத்தை விட்டு இறங்கிய இராமனது நெற்றியில் அநுபவம் வாய்க்கால் வெட்டியிருந்தது. சீதையின் பொலிவு அனுபவத்தால் பூத்திருந்தது. இருவர் சிரிப்பின் லயமும் மோக்ஷ லாகிரியை ஊட்டியது.

ராமனைஅழைத்துக்கொண்டு கோதமன் வெளியே உலாவச் சென்று விட்டான்.

தன் கருப்பையில் கிடந்து வளர்ந்த குழந்தையால் சுரக்கும் ஒரு பரிவுடன் அகலிகை அவளை உள்ளே அழைத்துச் சென்றாள். இருவரும் புன் சிரிப்புடன் உட்கார்ந்திருந்தார்கள்.

ராவணன் தூக்கிச் சென்றது, துன்பம், மீட்பு எல்லாவற்றையும் துன்பக்கறை படியாமல் சொன்னாள் சீதை. ராமனுடன் சேர்ந்துவிட்ட பிறகு துன்பத்துக்கு அவளிடம் இடம் ஏது?

அக்கினிப் பிரவேசத்தைச் சொன்னாள், அகலிகை துடித்து விட்டாள்.

''அவர் கேட்டாரா? நீ ஏன் செய்தாய்?'' என்று கேட்டாள்.

''அவர் கேட்டார். நான் செய்தேன்'' என்றாள் சீதை, அமைதியாக.

''அவன் கேட்டானா?'' என்று கத்தினாள் அகலிகை; அவள் மனதில் கண்ணகி வெறி தாண்டவமாடியது.

அகலிகைக்கு ஒரு நீதி, அவனுக்கு ஒரு நீதியா? ஏமாற்றா? கோதமன் சாபம் குடலோடு பிறந்த நியாயமா?

இருவரும் வெகு நேரம் மௌனமாக இருந்தனர்.

''உலகத்துக்கு நிரூபிக்க வேண்டாமா?'' என்று கூறி மெதுவாகச் சிரித்தாள் சீதை.

''உள்ளத்துக்குத் தெரிந்தால் போதாதா? உண்மையை உலகுக்கு நிரூபிக்க முடியுமா?'' என்றாள் அகலிகை, வார்த்தை வறண்டது.

''நிரூபித்து விட்டால் மட்டும் அது உண்மையாகி விடப்போகிறதா; உள்ளத்தைத் தொடவில்லையானால்? நிற்கட்டும்; உலகம் ஏது?'' என்றாள் அகலிகை.

வெளியே பேச்சுக் குரல் கேட்டது, அவர்கள் திரும்பி விட்டார்கள்.



**... அகலிகைக்கு ஒரு நீதி, அவனுக்கு ஒரு நீதியா? ஏமாற்றா? கோதமன் சாபம் குடலோடு பிறந்த நியாயமா? ...**

சீதை அரண்மனைக்குப் போவதற்காக வெளியே வந்தாள். அகலிகை வரவில்லை.

ராமன் மனசைச் சுட்டது; காலில் படிந்த தூசி அவனைச் சுட்டது.

ரதம் உருண்டது; உருளைகளின்சப்தமும் ஓய்ந்தது.

கோதமன் நின்றபடியே யோசனையில் ஆழ்ந்தான். நிலை காணாது தவிக்கும் திரிசங்கு மண்டலம் அவன் கண்ணில் பட்டது.

புதிய யோசனையில் ஒன்று மனக் குகையில் மின் வெட்டிப் பாய்ந்து மடிந்தது. மனச சுமையை நீக்கிப் பழைய பந்தத்தை வரவிக்க, குழந்தை ஒன்றை வரித்தால் என்ன? அதன் பசலை விரல்கள் அவள் மனசில் சுமையை இறக்கி விடவா?

உள்ளே நுழைந்தான்.

அகலிகைக்கு பிரக்ஞை மருண்ட நிலை. மறுபடியும் இந்திர நாடகம், மறக்க வேண்டிய இந்திர நாடகம், மனத்திரையில் நடந்து கொண்டிருந்தது.

கோதமன் அவளைத் தழுவினான்.

கோதமன் உருவில் வந்த இந்திர வேடமாகப் பட்டது அவளுக்கு. அவள் நெஞ்சு கல்லால் இறுகியது. என்ன நிம்மதி!

கோதமன் கைக்குள் சிக்கிக் கிடந்தது ஒரு கற்சிலை.

அகலிகை மீண்டும் கல்லானாள்.

மனச்சுமை மடிந்தது.

★ ★ ★

கைலயங்கிரியை நாடி ஒற்றை மனித உருவம் பனிப் பாலைவனத்தின் வழியாக விரைந்து கொண்டிருந்தது. அதன் கதிகாலில் விரக்தி வைரம் பாய்ந்து கிடந்தது.

அவன்தான் கோதமன்.

அவன் துறவியானான்.

நன்றி : ஐந்திணைப் பதிப்பகம், சென்னை.

**சாபவிமோசனம் கதைபற்றிய விமரிசனங்களுக்கு படைப்பாளர் புதுமைப்பித்தனின் பதில் பக்கம் எண் 36 .ல்**

## வள்ளுவர் செய்த புரட்சி!

திருக்குறள் என்னும் நூலின் அமைப்பே, உலக வாழ்வு பற்றிய வள்ளுவரின் பார்வையைத் தெளிவாக்கு கிறது. தலைவனும் தலைவியும் கூடிக்களிக்கும் இன்பத்தை வள்ளுவர் காமத்துப்பாலில், இருபத்தைந்து அதிகாரங்களில் எடுத்துக் கூறியுள்ளார். ஏனைய பல அறநூல்களும் சமய நூல் களும் கூறுவது போல, அவர் இத்தகைய இன்பத்தைச் சிற்றின்பமென இழிந்துரைக்க வில்லை. களவொழுக்கத்தைக் கூட, அவர் கடிந்துரைத்திட வில்லை. உயர்ந்த குறிக்கோளு டைய. காதலின்பத்தை வள்ளுவர் காமத்துப் பாலிற் கூறியுள்ளார். இலட்சியநோக்குடையவள்ளுவர் கையில் அகப்பொருள் மரபு இத்தகைய வடிவத்தைப் பெறு கிறது. இயற்கை நெறிக்காலத் தமிழர் வாழ்வில் இடம்பெற்ற பரத்தை வாழ்வில் எழும் பிணக்கினை மருதமாகக் கூறா மல், வெவ்வேறு வளர்ந்த இரண்டு உள்ளங்கள் படிப் படியே ஊடாடித் தட்டுத்தடு மாறி ஒன்றாய்க் கூடுவதனையே மருதமாகக் கூறிப் பெரியதொரு புரட்சி செய்துள்ளார் வள்ளுவர் என எடுத்துக்காட்டுவர். புலவி நுணுக்கம் வள்ளுவர் கூறிய புதுவகை மருதமாகும்.

– டாக்டர் ஆ. வேலுப்பிள்ளை எழுதிய ''தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும்'' என்னும் நூலிலிருந்து.

**எல்லாரையும் கவரும் முல்லாவின் கதை**

## சர்க்கரையும் உப்பும்

ஒரு சமயம் முல்லாவும், அவருடைய நண்பரும் சுற்றுப்பிரயாணம் மேற்கொண்டு ஊர் ஊராகச் சென்றனர்.

நண்பர்கள் இருவரிடமும் ஒரே ஒரு குவளை இருந்தது. எனவே, நண்பர்கள் இருவரும் ஆளுக்குப் பாதி பணம்போட்டுக் குவளை நிறையப் பால் வாங்கினார்கள்.

நண்பர், முல்லாவிடம், ''முல்லா, உங்களுடைய பாதிப்பங்குப் பாலைப் பருகிவிட்டு, மீதிப்பாலை என்னிடம் தந்தால், நான் என்னிடம் உள்ள சிறிது சர்க்கரையை அதில் கலந்து பருகுவேன்'' என்றார்.

உடனே முல்லா, ''தோழரே! பாலில் சர்க்கரையை இப்போதே கலந்துவிடுங்கள். நான் பாதிப் பாலைப் பருகிவிட்டு, மீதிப்பாலை உங்களிடம் தருகிறேன்'' என்று சொன்னார்.

அதற்கு நண்பர் ''என்னிடம் உள்ள சர்க்கரை பாதிக் குவளைப் பாலுக்குத்தான் போதுமானதாக இருக்கும். ஆதலால், நான் இப்போதே பாலில் சர்க்கரையைக் கலக்க மாட்டேன், உங்களுடைய பாதிப்பங்கு பாலைக் குடித்து விட்டு மீதியைக் கொடுங்கள்'' என்று கூறினார் நண்பர்.

நண்பரின் தன்னலத்தைக் கண்டு கோபமடைந்த முல்லா, 'சரி' என்று சொல்லிவிட்டுத் தம் பையிலிருந்த பொட்டலத்தை எடுத்துப் பிரித்தார்.

நண்பர், ''அது என்ன பொட்டலம் முல்லா?'' என்று ஆவலுடன் கேட்டார்.

அதற்கு முல்லா, ''இது உப்பு. என் பங்குப் பாலில் உப்பைக்கலந்து பருகப்போகிறேன்'' என்று சொன்னார்.

உடனே நண்பர் பதறி, ''வேண்டாம் முல்லா... அவ்வாறு செய்யாதீர்கள்!'' என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே, முல்லா பாலில் உப்பைக் கொட்டி, அது பாலில் கலக்கு முன், மடமடவென்று பாதிக் குவளைப் பாலைப் பருகியபின், மீதியைத் தோழரிடம் கொடுத்தார்.

முல்லாவின் செயலைக் கண்டு திகைத்துவிட்டார் நண்பர்.

# மூக்கு

## மூக்கின் மேல் விரல் வைக்க வைக்கும் வியத்தகு செய்திகள்

### டாக்டர் எம்.ஜுப்ளி, எம்.டி.

சுவாசிப்பதற்கு முக்கியமான உறுப்பு மட்டுமல்ல; முகத்திற்கு அழகு சேர்ப்பதாகவும் விளங்குவது மூக்குதான். மூக்கு எடுப்பாக இல்லாவிட்டால், மற்றவர்கள் கேலி செய்வதை நாம் பார்த்திருக்கிறோம். 'இதென்ன ஜப்பான் காரனாட்டம்' என்றெல்லாம் அப்படிப்பட்டவர்களைக் கிண்டல் செய்வார்கள்.

முகத்திலேயே, நம் மூக்கைச் சுற்றிலும் பரவலாக நான்கு காற்றுப் பைகள் (Paranasal Air Sinus) இருக்கின்றன. அவைகளே, நாம் நம் தலையில் பாரத்தை உணரமுடியாமல் செய்கின்றன.

இத்தகைய காற்றுப் பைகளில், Frontal என்ற காற்றுப்பை நம் நெற்றியில் இருக்கிறது. Maxilary Sinus என்னும் காற்றுப்பையானது கண்களுக்குக் கீழே, மேல் தாடையில் இருக்கிறது. Ethmoidal Sinus காற்றுப் பைகள் மூக்கைச் சுற்றியே அமைந்திருக்கின்றன. Sphenoidal Sinus எனப்படுவது நம்முடைய நடு நெற்றியின் உள் ஆழத்தில் அமைந்திருக்கிறது.

இந்தக் காற்றுப் பைகளில் சீழ் உண்டானால் 'சைனசைடிஸ்' என்னும் தலைவலி ஏற்படும். இதில் 2 வகை உண்டு. அக்யூட் (Acute) என்கிற 'சைனசைடிஸ்' சில நாட்கள்தான் இருக்கம். கிரானிக் சைனசைடிஸ் என்பது மாதக் கணக்கில் நீடிக்கும்.



முதலாவதைப் போக்க மருந்தே போதும்; ஆனால் இரண்டாவது ஏற்பட்டால் அறுவை சிகிச்சைவரை போய்த்தான் ஆக வேண்டும்.

'கிரானிக் சைனசைடிஸ்' பிறவிக் கோளாறுகளாலும் வரும்; தூசி தும்புகளாலும் ஏற்படும்.

மெலிதான எலும்புகளாலும், தசைகளாலும் ஆன மூக்கில் வெளியே இரண்டு துளைகள் இருப்பது நமக்குத் தெரிகிறது; அதேபோல மூக்கின் கடைசியிலும் இரண்டு துளை கள் உண்டு.

'தூங் கையிலே வாங்குகின்ற மூச்சு - சுழிமாறிப் போனாலும் போச்சு' என்பது ஒரு பழம்பாடல். உயிருக்கு அவ்வளவு முக்கியமான காற்றைப் பிராண வாயுவாக உள்ளே இழுத்தும், கரியமில வாயுவாக வெளியேற்றியும் நம்மை உயிர்வாழ வைக்கின்ற உன்னதப் பணியைச் செய்வது மூக்கேயாகும்.

மூக்கின் முன்பு உள்ள புடைத்த பகுதியின் உட்புறத்தில் மெலிதான உரோமங்கள் இருக்கும்; இவைகள் மூலமே நாம் சுவாசிக்கும் காற்று சுத்திகரிக்கப்பட்டு நுரையீரலுக்கு அனுப்பி வைக்கப் படுகிறது.

நம் மூக்குத் துவாரத்தைச் சுற்றி, முகத்தில் இருக்கின்ற சுரப்பிகள் (Mucus Glands) முக்கியமானவை; இவற்றால்தான் நாம் சுவாசிக்கின்ற காற்று குளிர்விக்கப்படுகிறது.

நம்முடைய மூக்கில், முக்கியமாக ஏற்படும் நான்கைந்து கோளாறுகள் உண்டு. அதைக்கூட – பிறவிக் கோளாறுகள் என்றும், அவை அல்லாதவை என்றும் நாம் இரண்டாகப் பிரிக்கலாம்.

அவற்றைப் பற்றி நாம் சற்று விரிவாகப் பார்க்கலாம்.

★ மூக்கில் ஏற்படும் குறைபாடு அல்லது நோய் என்பது முக்கியமாகக் கிருமிகளால் உண்டாகும்.

★ ஒவ்வாமையால் (Allergy) உண்டாகும். நரம்புக் கோளாறு மூலம் ஏற்படும்.

★ கட்டிகள் மூலமாக வரும்.

★ இரத்தம் வடிதலால் உண்டாகும்.

★ மூக்கில் அடிபடுவதாலும் வரும்.



முகத்திற்கு அழகு தரும் முக்கிய உறுப்பான மூக்கு, சிலபேருக்கு அவலட்சணம் உண்டாக்குவதாக ஆகிவிடும். பிறவியிலேயே சிலருக்கு மூக்கு கோணல் மாணலாக அமைந்து விடுவதுண்டு. அல்லது மூக்கின் உள் எலும்பில் பிறப்பிலேயே வளைவு (Septal Deviation) ஏற்பட்டு அப்படியொரு குறைபாடு வரக்கூடும்; எதிர்பாராமல் அடிபட்டாலும் மூக்கு அவ்வாறு முகவசீகரத்தை மாற்றிவிடக் கூடும். இப்படிப்பட்ட மூக்கு உள்ளவர்கள் அறுவைச் சிகிச்சை மூலம் அதை

**முள் இல்லாக் கடிகாரம்!**

**சோம்பேறி என்பவன் இரண்டு முள்களும் இல்லாத கடிகாரம். அது நின்றாலும் ஓடினாலும் உபயோகமில்லை.**

**–கூப்பர்**

***பிரச்சினை எது?***

**பிரச்சினை எது என்று அறிவது முதல் பிரச்சினை. அதை அறிந்தாலே பாதிப் பிரச்சினை தீர்ந்து விடும்.**

**– ருப்யார்ட் கிப்ளிங்**

சரிப்படுத்திட முடியும்; அல்லது பிளாஸ்டிக் சர்ஜரி மூலமும் சீராக்கிட முடியும்.

அடுத்ததாக - மூக்கைத் தான் எல்லாவிதக் கிருமிகளும், பாக்டீரியா, வைரஸ், பங்கஸ் (Funcus) போன்றவைகளும் முதலில் தாக்கும் - அல்லது உடலுக்குள் செல்லும். இதனால் பலவகையான நோய்கள் ஏற்படக் கூடும். பொதுவாக இதனால் சாதாரணமாக முதலில் எல்லோருக்குமே ஏற்படுவது ஜலதோஷம் (Common Cold)

மூன்றாவதாக ஒவ்வாமையைச் சொல்லலாம். Allergic Rhinitis என்கின்ற ஒவ்வாமை நோய் மூக்கால் உண்டாகும். சுவாசிக்கும் காற்றில் கலந்துள்ள தூசி, நாய்களின் உடலில் உள்ள ஒட்டுண்ணி போன்றவைகளால் இந் நோய் வரக்கூடும். நோய் வருவதற்கான முன் அறிகுறிதான் தும்மல், தலைவலி போன்றவைகளாகும். மேலே நாம் தெரிவித்த காரணங்களைத்தவிர்த்தால், இவ்வகை நோயைக்கட்டுப் படுத்தலாம்.

இவ்வகையான பாதிப்பு, சில பேருக்கு வாரக் கணக்கிலோ, மாதக் கணக்கிலோ இருக்கும்; இன்னம் சிலருக்கு ஆண்டு முழுவதும் நீடிக்கும். அப்படி நீடித்திருப்பதை மருத்துவர்கள் 'Perennial Rhinitis' என்பார்கள்.

மூகத்தில் - மூக்கைச் சுற்றியுள்ள காற்றுப் பை களில் நோய்க் கிருமிகள் பரவுவது உண்டு; அப்படிப்பட்ட நிலை வந்தால், மருந்து மாத்திரைகள் மூலம் அதைக் குணப்படுத்துவது அவ்வளவு சுலபம் இல்லை; அப்படி அந்தப்

பிரச்சினையின் முற்றிய நிலை Chronic Sinusitis எனப்படும். இவ்வாறு ஆகிவிட்டால் நிச்சயம் அறுவை சிகிச்சை செய்து தான் தீரவேண்டும்.

இதையடுத்து-மூக்கில் சதை (Polyps) வளர்வது, கட்டிகள் (Tumour) ஆகிய துன்பங்களும் சிலருக்கு உண்டாகும்.

இன்னும் சிலருக்கு அவ்வப்போது மூக்கில் இரத்தம் வருவது உண்டு. இது மூக்கைப் பொறுத்த வரையில் ஒரு குறிப்பிடத் தக்க நோய் ஆகும். இதை ஆரம்பத்திலேயே கட்டுப் படுத்தத் தவறினால் உயிருக்கே ஆபத்தாகி விடும்.



சிறியவர்களைப் பொறுத்தவரையில், மூக்கில் உள்ள Little's area என்ற இரத்த நாளங்கள் நிறைந்த பகுதியில் சிறுகாயம் பட்டால் கூட இதுபோல் இரத்தக் கசிவு ஏற்படும்.

சிறியவர்களானாலும், பெரியவர்கனாலும் - சில பேருக்கு இரத்தப் புற்றுநோய், இரத்தம் உறையத் தேவையான அணுக்கள் (Platelets) குறைதல் போன்றவற்றாலும் மூக்கில் இரத்தக் கசிவு உண்டாகும்.

அவ்வாறில்லாமல் - இரத்தம் உறையத் தேவையான புரதம் (Clotting Factors) குறைவானாலோ, காணப்படாமலோ போனால் கூட மூக்கில் இரத்தம் வரும்.

தேங்கியுள்ள நீரில் உள்ள பாசியானது மூக்கினுட் புகுந்து பெருகினால், அதன் காரணமாக உள்ளே கட்டிகள் ஏற்படும். பெரும் பாலும் குளத்தில் குளிப்பவர்கள் இவ்வகைப் பாதிப்பிற்கு ஆளாவது உண்டு. அது போன்ற கட்டி வந்தாலும் ஆபத்து தான். (உதாரணம்) RHINOSPORIDIOSIS எனப்படும் நோய்.

இந்த நிலை ஏற்பட்டாலும் மூக்கிற்கு அறுவைச் சிகிச்சை தேவைப்படும்.

இவை தவிர, உயர் இரத்த அழுத்த நோயால் பாதிக்கப்படுகிறவர்களுக்கும் எப்போதாவது மூக்கில் இரத்தக் கசிவு உண்டாகும். அவ்வாறா னவர்கள், உடனே மருத்துவரை அணுகிப் பரிசோதித்துக் கொள்ள வேண்டும். உயர் இரத்த அழுத்தத்தைக் குறைக்க, அவர் பரிந்துரை செய்யும் மாத் திரைகளைக் குறிப்பிட்ட நேரத்தில் தவறாமல் உட்கொள்ள வேண்டும்.

நம் மூக்கில், Angioma எனப்படும் சிறு கட்டிகள் உண்டானாலும் சரி; அடி பட்டாலும் சரி, இரத்தம் வரத்தான் செய்யும். ஆனால், அதைச் சற்றும் அலட்சியப்படுத்தக்கூடாது. அதை நிறுத்த ஆவன செய்ய வேண்டும். அதில் நிற்காவிட்டால், அவசியம் மருத்துவரை நாடியே ஆகவேண்டும்.

சிலரை நாம் 'மூக்கால் பேசுகிறார்' என்றோ, பெண் குரலில் பேசுவதாகவோ கேலி செய்வது உண்டு; அதற்குக் காரணம், சளியால் மூக்கில் உண்டாகும் அடைப்புதான். அப்படி ஏற்பட்டால், குரலிலும் மாறுபாடு உண்டாகும்.

பொடி போடுவதை வழக்கமாகக் கொண்டிருக்கும் சிலபேர், அதனால் ஒரு தனி உற்சாகம் ஏற்படுவதாகச் சொல்லுவார்கள்; அதெல்லாம் சுத்தப் பொய். பொடி போடுவதால் எந்தவித நன்மையும் இல்லை; அதே நேரத்தில், அதிலும் ஓர் அளவைத் தாண்டிவிட்டால், அதன் காரணமாகவும் மூக்கில் இரத்தம் வந்துவிடும்.

இப்படி இரத்தக் கசிவுக்கு ஆளாகிற வர்கள், கூடியவரை வாயால் சுவாசிக்கலாம்;

**உங்களுடைய படிப்பு அனுபவம் முதலியவற்றைவிட முக்கியமான தகுதி ஒன்று உண்டு. எந்த ஒரு செயலிலும் விடாப்பிடியாகக் கடினமாக உழைக்கும் மன உறுதியே அத்தகுதியாகும்.**

**– ஹென்றி ஃபோர்ட்**

**சிறந்த பரிசு!**

**நீங்கள் பிறருக்குத் தரும் பரிசுப் பொருளைவிட மேன்மையானது, நீங்கள் பழகும் விதம்தான்!**

**– கார்லைல்**

ஆனால் தொடர்ந்து அப்படிச் செய்யாமல் 'கைமுறை வைத்தியம்' செய்து பார்க்கலாம்; அதிலும் இரத்தம் வருவது நிற்காத பட்சத்தில் மருத்துவரிடம் போய்க் காட்டிக்கொள்ளத்தான் வேண்டும்.

குளிக்கிற போது சிலருக்கு, மூக்கில் எண்ணெய் விட்டுக் கொள்ளும் பழக்கம் இருப்பதைப் பார்க்கிறோம்; அப்படி விடப்படும் எண்ணெயானது தொண்டைக்கு வந்து ஒருவிதக் கனகனப்பை உண்டாக்கும். ஆகவே, தொண்டை உணரும்படியான எதையும் மூக்கில் விடக்கூடாது. அப்படிச் செய்வதால் சுவாசிப்பதில் கூட தடை ஏற்படலாம்; அந்தப் பழக்கம் நிமோனியா(Lipoid Pnemonia) காய்ச்சல் வரைகூட கொண்டுபோய் விட்டுவிடும்.

மூக்கு அடைத்துக் கொண்டால் இது விரைவில் தானாகவே சரியாகி விடலாம்; அதற்காகத் துணியைத் திரித்து மூக்கில் விட்டுக்கொண்டு தும்முவதெல்லாம் ஆபத்தாகிவிடும்.

மூக்கில் ஏதாவது கேடு உண்டானால், அது நம் காதையும் பாதிக்கும்.

இரண்டுக்கும் அப்படியொரு தொடர்பு இயற்கையாகவே அமைந்திருக்கிறது. மலை வாசஸ்தலங்களுக்குப் போகிறவர்களுக்குக் காது அவ்வப்போது அடைத்துக் கொள்ளும்; உடனே, மூக்கைப் பொத்திச் சிறிது 'தம்' கட்டினால் சரியாகிவிடும். இதிலிருந்தே அதை நாம் உணரலாம்.

இதய நோயால் பாதிக்கப்பட்டவர்களைக் காலையிலும் மாலையிலும் நிதானமாகக் காற்றை உள்ளே இழுத்து அதை வாய்வழியே வெளியில் விடச் சொல்வார்கள், மருத்துவர்கள். இது ஒரு வித யோகாசனமுறை, இப்படிச் சிலமுறை செய்வதால், சுருங்கிவிரியும் இதயத்தின் செயல்முறை ஒழுங்குபடுத்தப்படும்.

அறுவைச் சிகிச்சை செய்கிற மருத்துவர்கள், மூக்குவரை துணி கட்டியிருப்பதைப் பார்க்கலாம்; இதற்குக் காரணம், நோயாளியால் மருத்துவருக்குப் பாதிப்பு வரக்கூடாது என்பதல்ல; மருத்துவரின் மூக்கால் நோயாளி பாதிக்கப்படக்கூடாது என்பதுதான். ஏனென்றால், மூக்கின் மூலம்தான் நோய்க்கிருமிகள் எளிதில் பரவும்.

பிணத்தின் மூக்கில் பஞ்சு வைத்து அடைப்பதற்கும் இதுவே காரணமாக இருக்கலாம்; அல்லது வேறு ஏதாவது அதற்கு ஐதீகக் காரணங்களும் கூறப்படலாம்.

சமண முனிவர்கள் கூட மூக்கையும் வாயையும் சேர்த்து ஒரு வெள்ளைத்துணிகட்டிக் கொள்ளுகிறார்கள். சுற்றுப்புறச் சீர்கேட்டிலிருந்து தப்புவதுதான் இதற்குக் காரணமா அல்லது வேறு ஏதாவது காரணமா என்று தெரியவில்லை!

சிறு குழந்தைகளைப் பெரியவர்களோ, காதலியைக் காதலர்களோ 'கண்ணே மூக்கே!' என்றெல்லாம் கொஞ்சிக் கொண்டாடவும் உதவுகிறது இந்த மூக்கு.

இதன் அமைப்பு ஆணுக்கும் பெண்ணுக்கும் வேறுபடுவதில்லை; இவ்வளவு ஏன், விலங்கினங்களுக்கும் கூட, மூக்கின் நடவடிக்கைகள் வித்தியாசப்படுவதில்லை.

இவ்வளவு முக்கிய உறுப்பான மூக்கிற்கு, பெண்கள் மூக்குத்தி கிரீடம் போட்டுக் கொள்ளுவது பொருத்தம்தானே அதே நேரத்தில் - முதல் தாரத்திற்குப் பிறக்கும் முதல் ஆணுக்கும் மூக்குக் குத்துகிறார்களே, அது ஏன் என்று கேட்காதீர்கள், காரணம் நமக்குத் தெரியாது!

●

## மலரும் மழலைகளும்

பேரறிஞர் பெர்னாட்ஷா வீட்டிற்கு ஒருவர் சென்றிருந்தார். மேல்நாட்டுப் பழக்கப்படி அவர் இல்லத்தில் கூஜாக்களில் மலர்கள் அலங்காரமாக வைக்காதது பார்க்க வந்தவருக்கு ஆச்சரியமாக இருந்தது. அவர் பெர்னாட்ஷாவைக் கேட்டார்.

''தங்களுக்கு மலர்கள்மீது ஆசை இல்லையா?''

புரிந்து கொண்டு ஷா சொன்னார்:

''மிகவும் ஆசை, குழந்தைகள்மீது கூட அதிக ஆசைதான்: அதற்காகக் குழந்தைகளின் தலைகளை வெட்டி, கூஜாவில் வைப்பதில்லை.''

★ கடல் கடந்த நாடுகளின் கவிதைச் செல்வம் ★

# மழை

**வால்ட்விட்மன் - அமெரிக்கா**

நீ யார் என்று கேட்டேன்
மழையைப் பார்த்து!

மழை சொன்னது:

''நான் பூமியின் கவிதை;

மண்ணிலிருந்தும் கடலிலிருந்தும்
நிரந்தரமாக எழுந்து ஆகாயம் நோக்கிப்
போகிறேன்.

தெளிவற்ற முறையில் என் உருவம்
அமைகிறது.

வறட்சியையும் புழுதிப்படலத்தையும் மாற்ற
விரும்புகிறேன்.

நானில்லாது போனால் அவற்றில்
இருப்பதெல்லாம்
வெறும் வித்துக்களே: மறைந்து கிடப்பவை
பிறக்காதவை.

இரவும் பகலும், எப்பொழுதும் எனது
உதயத்திற்கு
உயிரூட்டுகிறேன்.
புனிதப்படுத்துகிறேன்.
அழகுபடுத்துகிறேன்.

நான் பூமியின் கவிதை''

✳ ✳ ✳

# கண்

**ரசூல் கம்சதோவ் - ரஷியா**

ஒரு கைத்தடியின் மீது எழுதப்பட்ட
வாசகங்கள்:
''குருடனுக்கு நான் கண்ணாய் இருக்கிறேன்.
முடவனுக்குக் காலாய் இருக்கிறேன்.

✳ ✳ ✳

# மனிதன்

சமாதியில் பொறிக்கப்பட்ட வரிகள்:
''அவன் ஞானியல்ல.
ஆதி மனிதனுமல்ல.
ஆனால், அவனை வணங்குங்கள்
ஏனென்றால் அவன் மனிதன்''

✳ ✳ ✳

# சிறகு

**நீனா காசியன் - ரொமேனியா**

தன் தேசத்திற்காகப் போரிட்டபோது
அவன் ஒரு கையை இழந்தான்.

அந்த இழப்பு அவனைப் புலம்ப வைத்தது.

''இனிமேல் எதிலும் பாதியைத்தான்
என்னால் செய்ய முடியும்.

பாதி அறுவடையே என்னால் செய்ய
முடியும்.
பியானோவைப் பாதிதான் இசைக்க
முடியும்
கதவுகளை ஒரு கையினாலேயே தட்ட
முடியும்
எல்லாவற்றிலும் மிகவும் மோசமானது.
என் காதலியைப் பாதியே தழுவிக்கொள்ள
முடியும்
என்பதுதான்

சில விஷயங்களை என்னால் செய்யவே
முடியாது.

கலை நிகழ்ச்சிகளை என்னால் கண்டு
கைதட்ட இயலுமா?

அந்த நிமிஷத்திலிருந்து அவன் மிகுந்த
உற்சாகத்துடன்
ஒவ்வொன்றையும் இருமுறை செய்தான்.

இப்பொழுது
கைமுறிந்த இடத்தில்
சிறகு முளைத்துவிட்டது.

✳ ✳ ✳

# மரணத்தின் பின்

**சூடே - சீனா**

உங்கள் சடலம் நல்லடக்கத்திற்காக
வைக்கப்பட்டபோது
இப்படித் தீர்ப்பளிக்கப்பட்டது
''புரட்சிக்காகக்
காணிக்கையாக்கப் பட்ட
வாழ்வு இது''
உண்மையை மதித்தீர்கள்
ஆசானை நேசித்தீர்கள்
சரியான பாதையில்
தடுமாற்றம் இல்லாது சென்றீர்கள்.

# முயலும் ஆமையும்

**ரசூல் கம்சதோவ் – ரஷியா**

மனிதர்களே,
ஆமையைப் போல் ஏன் இவ்வளவு
மெதுவாகச் செல்கிறீர்கள்?

ஆமை பாய்ந்து ஓடுவதில்லை
ஆனால், அது எச்சரிக்கை மிகுந்த பிராணி,
குறைந்தது நூறு வருஷங்களாவது
வாழ்கிறது.

மனிதர்களே
முயலைப் போல் ஏன் அலறி அடித்துக்
கொண்டு ஓடுகிறீர்கள்?

முயல் வேகமாக ஓடுகிறது.
ஆனால், ஐந்து ஆண்டுகளுக்கு
மேல் அது உயிருடன் இருப்பதில்லையே.

✲ ✲ ✲

# சரித்திரம்

**சென் ஈ – சீனா**

சரித்திரம் மிகவும் நேர்மையானது
கணக்குத் தீர்க்கும் நாள் நிச்சயம் வரும்
சரியான பக்கத்தில் நிற்பவர்கள்
தலைமை வகித்துச் செல்வார்கள்
தவறான பக்கத்தில் நிற்பவர்கள் வீழ்வார்கள்.

**''வீணையே வாளாக''**
**மொழியாக்கக் கவிதைகள் நூலிலிருந்து.**

## சாபவிமோசனம் கதைபற்றிய விமரிசனங்களுக்குப் படைப்பாளர் புதுமைப்பித்தனின் பதில்



முக்கால் வாசிப் பேருக்கு இந்த சாப விமோசனம் கதை பிடிக்கவில்லை. காரணம் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு மாதிரி. விமரிசகர் 'சென்று தேய்ந்திறுதல்' என்றார். ஆனால் இன்னும் ஒருவர் வால்மீகி கதையில் அகலிகை கல்லாகவில்லையென்றும் ஜனங்களுக்கு உண்மையை விட உண்மையின் மீதுள்ள பாசிதான் கண்களுக்குப் பளபளப்பாக இருக்கிறது என்றார். பாசி என்பதுதான் என்ன? மனப்பக்குவத்தில் ஒரு நிலைதானே அதுவும்? அப்படிப் பார்க்கப் போனால் ஜனக ராகங்களிலிருந்து ஜன்ய ராகங்கள் பிறப்பது எல்லாமே பாசிதானே? தொன்னைக்கு நெய் தான் ஆதாரம் என்று கருதுகிறவர்கள் தாம், ஒரு குறிப்பிட்ட கோல வகையில்தான் எதுவும் அமைந்திருக்க முடியும் என்று நினைக்கிறார்கள். வேறு ஒரு விதமான கோலம் போட்டுக்காண்பிக்க முடியாது, கூடாது என்று கருதுகிறவர்கள் – இவர்கள் தத்துவ வாதிகள். உலக சிருஷ்டி இவர்களுடைய தத்துவத்துக்குள் மட்டும் ஒடுங்கி விடவில்லை.

நான் கதை எழுதுகிறவன். கதையிலே கல் உயிர் பெற்று மனிதத்தன்மை அடைந்து விடும், மூட்டைப் பூச்சிகள் அபிவாதையே சொல்லும். அதற்கு நான் என்ன செய்யட்டும்? கதையுலகத்தின் நியதி அது. நீங்கள் கண் கூடாகக் காணும் உலகத்தில் மனிதன் 'கல்லுப் பிள்ளையார்' மாதிரி உட்கார்ந்திருப்பதைப் பார்க்கவில்லையா? மனிதன் கல் மாதிரி இருக்கும் போது கல்தான் சற்று மனிதன் மாதிரி இருந்து பார்க்கட்டுமே! தவிரவும் பழைய கதைகளை எடுத்துக் கொண்டு அதை இஷ்டமான கோணங்களிலெல்லாம் நின்று கொண்டு பார்க்க எங்களுக்கு உரிமையுண்டு.

சாப விமோசனத்தைப் பற்றிய வரையில் எனக்கு ஒரே ஒரு குறைதான் உண்டு. அதில் வசிஷ்டனையும் கூனியையும் கூட்டிக் கொண்டு வர மறந்துபோனதுதான் அது. மற்றபடி யார் எப்படி கருதினாலும் ராமாயணக் கதையின் அமைதி முற்றும் பொருந்தித்தான் இருக்கிறது.

*– புதுமைப்பித்தன் 24.12.43*

# குழந்தைகள்

உங்கள் குழந்தைகள் உங்களுடையவை அல்ல
அவர்கள், வாழ்க்கை தன்மீது தானே கொண்ட
வேட்கை பெற்றெடுத்த பிள்ளைகள்

அவர்கள் உங்கள் வழியாக வருகிறார்கள்;
ஆனால் உங்களிடமிருந்தல்ல!
அவர்கள் உங்களோடு இருந்தாலும்
உங்களுடையவர்கள் அல்ல
அவர்களுக்கு நீங்கள் அளிக்க வேண்டியது
உங்கள் அன்பை! உங்கள் சிந்தனைகளை அல்ல!
ஏனெனில் அவர்களிடம் சுயசிந்தனை உள்ளது.

நீங்கள் குடிவைத்திருந்தது
அவர்களின் உடல்களைத்தான், ஆன்மாக்களை அல்ல!
ஏனெனில், அவர்களது ஆன்மாக்கள்
நாளை என்னும் மாளிகையில் வாழ்கின்றன.
அந்த இருப்பிடத்தை உங்கள் கனவுகளிலே கூட
நீங்கள் அடைய முடியாது.
நீங்கள் அவர்களைப் போல் இருக்க முயலலாம்
ஆனால் அவர்களை உங்களைப் போலாக்க நினைக்காதீர்கள்.
ஏனெனில், வாழ்க்கை பின்நோக்கிப் போவது இல்லை!
நேற்றைய பொழுதோடு தங்கிவிடுவதுமில்லை!



நீங்கள் விற்கள்!
உங்கள் மூலம், உயிருள்ள அம்புகளாக,
உங்கள் குழந்தைகள் செலுத்தப்படுகின்றன!
வில்லாளன் 'எல்லையில்லாமை'யின்
பாதையிலுள்ள இலக்கைப் பார்க்கிறான்.
தன் வலிமையெல்லாம் திரட்டி
வளைக்கிறான் — அவனுடைய அம்புகள்
விரைந்து வெகு தொலைவு
செல்ல வேண்டும் என்பதற்காக!
வில்லாளனின் கைகளில்
விருப்பத்தோடு வளைந்து கொடுங்கள்
ஏனெனில் பாய்ந்து செல்லும் அம்புகளை
அவன் நேசிப்பதைப் போலவே
நின்று கொண்டிருக்கும் வில்லையும்
அவன் நேசிக்கிறான்!

லெபனான் நாட்டுத் தத்துவக் கவிஞர் **கலீல் கிப்ரானின்** 'தீர்க்கதரிசி' யிலிருந்து



புதிதாகத் தேர்ந்தெடுக்
கப்பட்ட தமிழகச் சட்டமன்ற
உறுப்பினர்களுக்குப் பதவிப்
பிரமாணம் செய்துவைத்த
தற்காலிகப் பேரவைத் தலைவர்
திருமதி. ஏ.எஸ். பொன்னம்மாள்
அவர்களுடன் மாண்புமிகு முதல்வர்
டாக்டர் கலைஞர் அவர்கள் (23.5.96)



மறைந்த முன்னாள் தமிழக முதல்வர்
திருமதி ஜானகி ராமச்சந்திரன்
அவர்களின் உடல்மீது மாண்புமிகு
முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள்
மலர் வளையம் வைத்து அஞ்சலி
செலுத்தினார் (19.5.96)

மாண்புமிகு முதலமைச்சர்
அவர்களை, மாண்புமிகு
இலங்கைத் தொழிலாளர்
நல அமைச்சர்
திரு. தொண்டமான்
அவர்கள் சந்தித்து
உரையாடினார். (19.5.96)





மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. நாஞ்சில் கி. மனோகரன் அவர்கள், புதிதாகக் கட்டப்பட்டு வரும் சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டிடத்தைப் பார்வையிட்டார். (21.5.96)



மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.கோ. சி. மணி அவர்கள் தலைமைச்செயலகத்தில் சென்னைப் பெருநகர குடிநீர்ப் பிரச்சினை குறித்து அரசு உயர் அலுவலர்களுடன் ஆய்வு செய்தார். (18.5.96)



மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி. எஸ்.பி. சற்குணம் அவர்கள், கிண்டியில் உள்ள தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் கீழ் இயங்கிவரும் அச்சுக்கூடத்தில் நடைபெறும் பணியினை ஆய்வு செய்தார்.

11-ம் பக்கம் தொடர்ச்சி

மக்களின் அரசு, அதனால்தான் இந்த அரசு பொறுப்பேற்ற உடனேயே ஒரு கோடியே இருபத்தைந்து இலட்சம் மக்கள் பயன்பெறக் கூடிய அளவிற்குத் தரை வரி ரத்து செய்யப்பட்டுள்ளது. அதுபோலவே கடந்த ஆண்டு வடகிழக்கு பருவமழை பொய்த்த காரணத்தினால் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் விவசாயிகளுக்கு நிலவரி ரத்து செய்யப்பட்டு உரிய கடன் நிவாரணமும் வழங்கப்படும். வறட்சி நிவாரணப்பணிகள்

போர்க்கால அடிப்படையில் விரைவு படுத்தப்பட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பணிக்கப்பட்டுள்ளார்கள். இதுபற்றி மேலும் ஆய்வு செய்து விரிவான பணிகளைப் தீவிரப்படுத்தி நிறைவேற்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டம் ஜுன் திங்கள் முதல் வாரத்தில் நடைபெறும்.

வரையிலான சிறார்கள் அனைவரும் தொடக்கப்பள்ளிகளில் சேர்க்கப்பட்டு தொடர்ந்து கல்வி கற்பிக்கப்படுவதை உறுதி செய்ய உயர் முன்னுரிமை அளிக்கிறது. மேனிலைப் பள்ளிகளில் அனைத்து வசதிகளும் கொண்ட ஆய்வுக் கூடங்கள் அமைப்பதன் மூலமாக அறிவியல் கல்வியை மேம்படுத்த முயற்சி எடுக்கப்படும்.

## மக்கள் குறை களையும் மனுநீதித் திட்டம்

விவசாயிகள், நெசவாளர்கள், தொழிலாளர்கள், வணிகர்கள் போன்ற பல்வேறு பிரிவு மக்களின் தேவைகளைக் கேட்டறிந்து நிறைவேற்றுகின்ற செம்மையான

நிர்வாகத்தை அளிக்கவும் வேலை வாய்ப்பைப் பெருக்கவும் இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. மக்கள் பல்வேறு நிலைகளில் உள்ள அதிகாரிகளை எளிதில் சந்தித்து தங்களுடைய குறைகளை எடுத்துரைத்து



## முற்போக்குக் கல்விக் கொள்கை

21-ஆம் நூற்றாண்டின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் முற்போக்குக் கல்விக் கொள்கை வகுக்கப்படும். அனைத்து நிலைகளிலும் கல்வியின் தரத்தை மேம்படுத்தவும் கணிப்பொறிக் கல்வி அளிக்கவும் முக்கியத்துவம் அளிக்கப்படும். இந்த அரசு, ஆறு முதல் பதினோரு வயது

அக்குறைகளைக் களைந்திட வழிவகை செய்யும் மனு நீதித் திட்டம் இந்தியாவிலேயே முதல் முறையாக இந்த அரசினால்தான் 1969-ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. இடையில் கைவிடப்பட்ட அந்தத் திட்டம் மீண்டும் செயலாக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### மீண்டும் மேலவை

65 ஆண்டுகாலம் வரலாறு படைத்த தமிழகச் சட்டமன்ற மேலவை, மேதைகள் பலரின் மேலான கருத்துக்கள் இடம் பெற்று அறிவு, அனுபவம் ஆகியவற்றின் எண்ணக் கருவூலமாக ஒளிவிட்டதாகும். அரசின் கொள்கைகளையும், அதன் திட்டங்களையும், சட்டங்களையும் செம்மையாக வடிவமைப்பதற்குப் பெரிதும் பயன்பட்டு வந்த அந்த அவை 1986-ஆம் ஆண்டு கலைக்கப்பட்டதை அறிவீர்கள். தொன்மை வாய்ந்ததும் புகழ்மிக்கதுமான அந்த அவையை மீண்டும் அமைத்திடுவதற்கு ஏற்றதொரு சட்டம் இம்மன்றத்தில் உங்களின் ஒப்புதலுக்காக வைக்கப்படும்.

### பெண்கள் முன்னேற்றம்

''கண்களால் வழி காண முடிவதைப் போல பெண்களால் நாடு முன்னேறக் கூடும்'' என்றார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். அதனை மனத்தில் பதித்து இந்த அரசு முன்பு பொறுப்பேற்றிருந்த காலத்தில் பெண்களுக்குச் சொத்துரிமை, வேலைவாய்ப்புகளில் முப்பது சதவீதம், பெண்காவலர் படை, ஏழைப் பெண்களுக்கு இளங்கலை பட்ட படிப்பு வரை இலவசக் கல்வி, எட்டாவது வரை படித்த ஏழைப் பெண்களுக்குத் திருமண உதவி நிதி, கருவுற்ற மகளிருக்குப் பேறுகால நிதி உதவி எனப் பல திட்டங்களை நடைமுறைப்படுத்தியது. இடைக்காலத்தில் அதில் ஏற்பட்ட தொய்வைப் போக்கி அத்திட்டங்களை விரிவுபடுத்துவதுடன் மேலும் மாவட்டத்துக்கு ஆயிரம் பெண்களை, உரிய ஊதியம் வழங்கி, மதுவிலக்குப் பிரச்சாரத்தில் ஈடுபடுத்தி, குடியினால் வரும் கேடுகளை விளக்கிட, இந்த அரசு முயற்சி மேற்கொள்ள இருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

### அரசுப் பணியாளர் நலனுக்கு உரிய முக்கியத்துவம்

திட்டங்களையும், திட்டப் பணிகளையும் திறம்பட செயல்படுத்துவதில் அரசுத் துறைகள், அரசுத்துறை நிறுவனங்கள், அரசு சார்புடைய நிறுவனங்கள் ஆகியவற்றின் பணியாளர்களது பங்கின் முக்கியத்துவத்தை இவ்வரசு முழுவதும் உணர்ந்துள்ளது. எனவே, அரசுப் பணியாளர்களின் நலனுக்கு உரிய முக்கியத்துவம் அளிக்கப்படும். மத்திய ஊதியக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் மத்திய அரசுப் பணியாளர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட சம்பள வீதங்கள், மாநில அரசுப் பணியாளர்களுக்கும் வழங்கப்படும். ஆசிரியர் நியமனங்கள், மீண்டும் வேலை வாய்ப்பகங்கள் வாயிலாகவே மேற்கொள்ளப் படும். இத்தகைய அரசுப் பணியாளர்களின் ஒத்துழைப்பை பெறுவதன் மூலம் பல்வேறு திட்டங்கள், திட்டப் பணிகளின் பயன்கள் எவ்வித விடுபாடுமின்றி மக்களுக்கு முழுமையாகவும் விரைந்தும் கிடைத்திட வழி காணப்படும்.

**உங்களை நம்புங்கள்**

**உலகத்தை நம்ப வேண்டாம். அது சொன்னதை எல்லாம் தந்ததில்லை. உங்களை நம்புங்கள். நீங்கள் விரும்பியதை எல்லாம் பெறலாம்.**

**– அகஸ்டின்**

### கருத்து குலுங்கும் சோலையாய் விளங்கட்டும் இம்மாமன்றம்

நாட்டுக்கும், மக்களுக்கும் நற்றொண்டாற்றிட இந்தப் பேரவையைப் பயன்படுத்திக் கொள்ளும் வாய்ப்புப் பெற்றுள்ள நீங்கள், ஜனநாயக மாண்புக்கு மேலும் ஒளி சேர்க்கும் வகையில் நாடு வாழவும், நலிவு நீங்கவும் நல்லதோர் கருத்துக் குலுங்கும் சோலையாக இந்த மாமன்றத்தை ஆக்கிக் கொண்டு, அந்தச் செழுமையான கருத்துக்கள் செயலாக்கம் பெறத்தக்கவகையில் விவேகமிகு விவாதங்களை நடத்தி கடமை, கண்ணியம், கட்டுப்பாடு போற்றிடுவீர்கள் என்ற நெஞ்சம் நிறைந்த நம்பிக்கையுடன் இந்த உரையை நிறைவு செய்கிறேன்.

வணக்கம்.

*(திருவள்ளுவர் ஆண்டு 2027 வைகாசித் திங்கள் 10ம் நாள் 1996 ஆம் ஆண்டு மே திங்கள் 23ம் நாள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆற்றிய உரை)*




✷ **பறவைகள் பலவிதம்:**

பாலினம் பற்றி, பறவை இனத்திடையே ஆராய்ந்த விஞ்ஞானி டார்வின், பெண் பறவைகளைக் கவருவதற்காகவே ஆண் பறவைகளுக்கு விரிவான அலங்கார உறுப்புகள் அமைந்திருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்.

ஆனால், இப்போது விஞ்ஞானிகள் பலரும் அதை மறுத்துவருகிறார்கள்.

குறிப்பாக - ஸ்வீடனைச் சேர்ந்த ஆன்டர்ஸ் பேப் மோவர் என்பார், 'தகைவிலான்' என்ற குருவிகளை வைத்து நடத்திய தம்முடைய ஆய்வின் முடிவில் - அவ்வாறான அமைப்பு தற்செயலாக ஏற்பட்டதே என்கிறார். பார்வைக்கு அழகாகத் தோன்றும் ஆண் பறவைகளைப் பெண் பறவைகள் விரும்பித் தேர்ந்தெடுப்பதன் காரணமாக எந்த நன்மையும், சாதகமும் அடைவதில்லை என்று அழுத்தமாகக் கருத்தறிவித்திருக்கிறார், அவர்.

✷ **300 ஆண்டுகள் வாழலாம்:**

ரஷ்ய விஞ்ஞானிகள், விலங்குகளை வைத்து நடத்திய ஓர் ஆய்வு முடிவில், தெரிவித்துள்ள கருத்து நம்மை வியக்கவைப்பதாக இருக்கிறது. மூளையில் செய்யப்படும் ஒரு சாதாரண அறுவைச் சிகிச்சை



யின் மூலம் முந்நூறாண்டுக் காலம் வாழக்கூடிய சாத்தியம் மனிதனுக்கு ஏற்படக்கூடுமாம்!

✷ **குடிக்காதே:**

மது அருந்துவதால் ஒருவருக்கு எவ்வகை பாதிப்புகள் ஏற்படும் என்று லண்டன் மாநகர உளக்கூறு இயல் நிறுவனப் பிரிவு ஒன்று அண்மையில் ஆராய்ச்சி செய்தது.

ஜெப்ரி கிரே என்பாரின் தலைமையிலான அக்குழு, முதலில் ஓர் எலிக்கு மதுவை அளித்துப் பார்த்தது; குடிப்பதால் உண்டாகும் நினைவுத் திறன் பாதிப்பு அதன்மூலம் கணக்கிடப்பட்டது. முடிவில் அவர்கள் அளித்த ஆய்வறிக்கை தெரிவித்த இரண்டு முக்கியச் செய்திகள் வருமாறு:

குடிப்பதால், மூளையின் செயல் பாதிக்கப்பட்டு நினைவுத்திறன் கெட்டுப் போய்விடும்.

அதிக அளவில் குடிப்பவனுக்கு, இழந்த நினைவுத் திறனைத் திரும்பக் கொண்டுவர முடியாமலே போய்விடும்!

✷ **உயிரினத் தோற்றம்:**

உலகத்தில், முதன் முதலாக உயிரினம் கடலில்தான் தோன்றியது என்றும், அதன் பின்பே நிலத்தில் தோன்றியதாகவும் நம் நாட்டு விஞ்ஞானிகள் கூறுகிறார்கள் அல்லவா?

ஆனால், லோட்சினா லோசின்ஸ்சி என்கிற ரஷ்ய விஞ்ஞானியொருவர், முதன் முதலில் உயிரினம் தோன்றியது நிலப்பகுதியிலேதான் என்கிற மாற்றுக் கருத்தைச் சொல்லியிருக்கிறார்.

✷ **எப்படிச் சாப்பிடவேண்டும்?**

''பச்சைக் காய்கறிகளையும், கீரைகளையும் நாள் தோறும் ஓரளவேனும் உண்ணுங்கள். உருளைக் கிழங்கு, வள்ளிக்கிழங்கு, சேனைக்கிழங்கு ஆகியவற்றை நான் காய்கறிகளோடு சேர்க்க மாட்டேன்; மாவுப்பொருளை மட்டுமே கொண்ட அவைகளைத் தானிய வகைகளோடுதான் சேர்க்கவேண்டும்.''

''வெள்ளரிக்காய், தக்காளிப் பழம், கடுகுக்கீரை போன்ற பச்சைக்காய்கறிகளைச்சமைக்க வேண்டுமென்ற அவசியமே இல்லை. நன்றாகக் கழுவி விட்டுப் பச்சையாகவே சாப் பிடலாம். அப்ப்டிச்சாப்பிடுவது நல்லது. நம் உடல் நலத்தைப் பாதுகாக்கவல்லது.''



இதைத் தெரிவித்தது எந்த விஞ்ஞானியும் அல்ல; 'தேசத் தந்தை' காந்தியடிகள் தான்! 1905-ல் தாம் எழுதிய 'Key to Health' என்ற நூலில் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

**✷ பெண்களும் அறிவியலும்:**

சிலப்பதிகாரக் கண்ணகி, தனது காற் சிலம்பில் இருந்த மாணிக்கப்பரல் தடயத்தைக் கொண்டே, தன் கணவனின் நேர்மையை நிரூபித்தாள் அல்லவா? இப்போதும் கூட தடய அறிவியல் துறையில் பெண்களே அதிக அளவில் விரும்பி இறங்குவதாக ஒரு கணக்கெடுப்புத் தெரிவிக்கிறது.

**✷ கரப்பான் பூச்சிகள்:**

கரப்பான் பூச்சிகள், அதற்காக விற்கப்படும் மருந்துகளால் எளிதில் சாவ தில்லை; ஆனால், அதற்கு வேறு ஒரு எளிய வழியிருக்கிறது. 2 டீ ஸ்பூன் போரிக் பவுடரும் அதைப்போல் 4 பங்கு கோதுமை மாவும், சிறிதளவு சர்க்கரையும் கலந்து உருட்டி, அப்பூச்சிகள் வரும் இடத்தில் வைத்தால் போதுமாம். கரப்பான்கள் எளிதில் செத்துவிடும் என்கிறார் ஹாரிமில்லர்.

**✷ இரைச்சலைத் தடுக்கத் தனிப்படை:**

அளவுகடந்த ஓசையும், தூய்மைக் கேடு உண்டாக்கும். ஆகவே இரவு 10 மணிக்கு மேல் அப்படிப்பட்ட இரைச்சல் உண்டாக்குவோரை - அதாவது இசையோடு கூடிய ஆட்டம் பாட்டமானாலும் சரி, அதை ஏற்படுத்துவோரைக் கண்டு பிடித்துத் தண்டிக்கிறார்கள்.

எங்கே தெரியுமோ? லண்டன் மேற்குப் பகுதியில் உள்ள ஈலிங்பரோ நகராட்சியில்.



**✷ நவீன ரோபோட்**

டோக்கியோ அறிவியல் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் புமியோஹாரா என்பவர் இயந்திர மனிதன் என்று அழைக்கப்படும் புதிய ரோபோட் ஒன்றைக் கண்டு பிடித்து இருக்கிறார். பெண் வடிவில் உள்ள அந்த இயந்திரம் கோபம், சோகம், அச்சம், வியப்பு, மகிழ்ச்சி, வெறுப்பு போன்ற ஆறு வகையான உணர்ச்சிகளை வெளிப்படுத்து கிறது. சிலிக்கோன் என்னும் பொருளைக் கொண்டு அதன் தோல் பகுதி செய்யப்பட் டுள்ளது. அலுமினியக் கம்பி களால் அதன் 24 தசைப் பகுதிகள் உருவாக்கப்பட்டுள்ளன. அதன் கண்களின் பின்புறம் நுண்ணிய வீடியோகாமிராக்கள் பொருத் தப்பட்டுள்ளன. இன்னும் அதிகமான ஆராய்ச்சியை மேற் கொண்டு அதிக சக்தி வாய்ந்த கணினி ஒன்றைத் தயாரித்து விட்டால் அதனைப் பேசவும் வைத்துவிடலாம் என்கிறார் அந்தப் பேராசிரியர்.

**✷ மருத்துவக் கலையின் ரகசியங்கள்**

மேலே குறிப்பிட்ட தலைப்பு கொண்ட புத்தகம், டாக்டர் ஹெர்மன் என்பவரால் எழுதப்பட்டு, அவர் காலமான தற்குப் பின் அவரது அலமாரி யிலிருந்து கண்டுபிடிக்கப் பட்டது. அதை ஏலத்தில் விட்ட பொழுது 10000 பவுனுக்குப் போயிற்று. அதன் 'சீல்' உடைக் கப்பட்டு உள்ளே பார்த்த பொழுது, 90 பக்கங்கள் வெறும் பேப்பராகவே இருந்தது. தலைப்பு எழுதப்பட்டிருந்த முதல் பக்கத்தில், டாக்டர் 'உனது தலையை எப்போதும் குளிர்ச்சியாக வைத்துக் கொள். உனது கால்களைச் சூடாக வைத் துக்கொள். இவ்வாறு செய்தால் புகழ்பெற்ற டாக்டரைக் கூட ஏழையாக்கி விடலாம், என்று எழுதியிருந்தார்.

# சட்ட மன்றத்தில் நகைச்சுவை

சட்ட மன்றத்தில் நகைச்சுவை

## என்றும் மாறா இளமையின் இரகசியம் இதோ!

மாண்புமிகு முதல்வர் அவர்களையும், மாண்புமிகு அவை முன்னவர் அன்பழகன் அவர்களையும் சுட்டிக்காட்டி, இவ்வளவு வயதான காலத்திலும் எப்படி இளமையாக இருக்கிறீர்கள்? அதைச் சொன்னால் எங்களுக்கும் உதவியாக இருக்கும், என்றார் தமிழ் மாநில காங்கிரஸ் உறுப்பினர் திரு அழகிரி. பின்னர், மாண்புமிகு முதல்வர் அவர்கள், நாட்டையும், சமுதாயத்தையும் காப்பாற்ற உங்களைப் போன்ற இளைஞர்கள் இருக்கிறார்கள் என்ற மகிழ்ச்சிதான், எங்கள் இளமைக்குக் காரணம் என்றதும் சிரிப்பொலியில் மூழ்கியது சட்டப்பேரவை.

## "சூட்கேஸ் போடமாட்டேன்"

அ.தி.மு.க எம்.எல்.ஏ திருதாமரைக்கனி பேசும்போது, "எம்.ஜி.ஆர்., தி.மு.க.வை விட்டுப் பிரிந்த போது கட்சிக்காரர்கள் மீது பொய் கேஸ் (வழக்கு) போடப்பட்டது. கடந்த கால தி.மு.க. ஆட்சியில் என்னை குண்டர்கள் தடுப்புச் சட்டத்தில் கைது செய்தார்கள். இன்னும் என்னென்ன கேஸ் என் மீது போடப் போகிறீர்களோ?" என்றார்.

உடனே மாண்புமிகு முதல்வர் கருணாநிதி அவர்கள் எழுந்து, எந்த கேஸ் போட்டாலும் போடுவேன், சூட்கேஸ் போட மாட்டேன் என்றதும் சட்டமன்றத்தில் சிரிப்பலை எழுந்தது.

## பாராட்டுரையும் பாதுகாப்புரையும்

சட்டமன்றத்தில் அஇஅதிமுக உறுப்பினர் திரு எஸ். திருநாவுக்கரசு பேசுகையில், இதுவரை இருந்த பேரவைத் தலைவர்கள் திருவாளர்கள் பி.எச். பாண்டியன், தமிழ்க்குடிமகன், முத்தையா ஆகியோரின் பெயர்களைக் குறிப்பிட்டு, இவர்களில் யார் யார் சிறப்பாகச் செயல்பட்டார்களோ, அவர்களைத் தாங்கள் பின்பற்ற வேண்டும் என்று கூறினார்.

பின்னர், மாண்புமிகு சட்டப்பேரவை தலைவர் திரு. பி.டி.ஆர். பழனிவேல்ராஜன் பேசுகையில் திரு. திருநாவுக்கரசு சில யோசனைகளைச் சொன்னார். அவரை என் அறைக்கு அழைத்து யார், யாரைப் பின்பற்றக் கூடாது என்ற பட்டியல் வாங்கிக் கொள்வேன் என்று கூறியதும், திரு. திருநாவுக்கரசு மீண்டும் எழுந்து 'நான் பட்டியல் தருவதாகக் கூறவில்லை. முந்தைய பேரவைத் தலைவர்கள் வழங்கிய தீர்ப்புகளைத் தாங்கள் பின்பற்ற வேண்டும் என்றுதான் கூறினேன்' என்றார்.

உடனே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் எழுந்து முன்னர் திருநாவுக்கரசு வழங்கியது பாராட்டுரை, இப்போது வழங்குவது பாதுகாப்புரை, என்று நகைச்சுவையோடு கூறினார்.

## யார் யார் எனக் கேட்பவர் உங்களவரா எங்களவரா? அவர் நம்மவர்!

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தில் பேசிய திரு. டி. ராஜேந்தர், எம்.எல்.ஏ., கடந்த ஆட்சிக்காலத்தில் நடைபெற்ற பல வன்முறை குற்ற சம்பவங்களை விவரித்தார். இவற்றைச் செய்த குற்றவாளிகள் யார்? யார்? இப்படி யார் யார் என்ற கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருப்பது யார் என்றால் இங்கே உறுப்பினராக உள்ள டி.ஆர். என்றார்.

அவர் பேசி முடிந்ததும் திரு அழகிரி (தமிழ் மாநில காங்கிரஸ்) டி.ஆர். யார்? அவர் உங்களவரா? எங்களவரா? என்று குரலெழுப்ப, அதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள், அவர் உங்களவரும் அல்ல; எங்களவரும் அல்ல; நம்மவர்; என்று கூறியதும் சிரிப்பலை பேரவையெங்கும் எழுந்தது.

## மாண்புமிகு முதல்வரின் இல்லத்தில் ஒரு புதுமை

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் கோபாலபுரம் இல்ல வாசலில் புதுமையான ஒரு விளம்பரப் பலகை உள்ளது. அதில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் அன்றாட நிகழ்ச்சிகள், தினந்தோறும் எழுதப்பட்டுப் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன.

இதனால், மாண்புமிகு முதல்வர் இல்லத்திற்கு வரும் பொதுமக்கள், செய்தியாளர்கள் மாண்புமிகு முதல்வரைச் சந்திக்க, வீணாக அலையாமலிருக்க, இது பெரிதும் உதவுகிறது. இந்த விளம்பரப் பலகைதமிழக முதல்வர்களின் வரலாற்றில் ஒரு புதுமை மட்டுமல்ல பொது மக்களுக்கு ஆற்றப்படும் ஒரு நல்ல சேவையுமல்லவா!

## ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட புத்தர் சிற்பம் சென்னைக்கு அருகில் கண்டுபிடிப்பு

தமிழ்நாடு அரசு, தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னையை அடுத்துள்ள மேடவாக்கத்தின் அருகில் அமைந்திருக்கும் ஒட்டியம்பாக்கம் என்ற ஊரில், எழில் வாய்ந்த புத்தரின் சிலையொன்றினைக்கண்டு பிடித்துள்ளது. இதுவரை தமிழகத்தில் கிடைத்த புத்தர் சிலைகளில், காணவியலாத அளவு மிக அழகிய கொடிகளின் சுருள் வேலைப்பாடுகளைக் கொண்ட தனிச் சிறப்பு வாய்ந்த சிற்பம் இது.

செங்கை-எம்.ஜி.ஆர் மாவட்டத்தில் அமைந்த மிகச் சிற்றூரான ஒட்டியம் பாக்கத்திலுள்ள ஒட்டீஸ்வரர் கோயிலின் தென் புறத்தே காணப்படுகிறது இச்சிற்பம்.

கணுக்கால் வரை நீண்ட ஆடையணிந்து இரு கரங்களுடன் தோற்றமளிக்கும் இச்சிற்பம் பத்ர பீடத்தின்மீது நேராக நின்ற நிலையில் வடிக்கப்பட்டுள்ளது. நெற்றியும், முகமும் சிதைந்திருப்பினும், இச்சிற்பத்தின் எழிலான பிரபை இதற்கு அணிசேர்க்கின்றது. பிரபையினின்றும் வெளிவரும் வகையில் காட்டப்பட்டுள்ள கொடிகள் சுருள் சுருளாக வளைந்து புத்தபிரானின் பாதம்வரை இரு மருங்கிலும் செல்கின்றவாய் வடிக்கப்பட்டுள்ளன. இச்சிற்பத்தின் அமைதிதவழும் வடிவத்தையும், எழிலார்ந்த வடிவமைப்பையும் கொண்டு கருதுகையில், இச்சிலை கி.பி. 10-11ஆம் நூற்றாண்டில் சோழர் கலைப் பாணியில் வடிக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்று கருதலாம்.

சென்னையில் ஏற்கெனவே கி.பி. முதலிரண்டு நூற்றாண்டுகளைச் சேர்ந்த புத்தர் புடைப்புச் சிற்பங்களும், அமர்ந்த நிலையிலுள்ள கி.பி. 11-12ஆம் நூற்றாண்டைச்சேர்ந்த புத்தர் சிற்பங்களும்கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் சென்னைக்கு அருகிலேயேநின்றநிலையிலுள்ள மற்றொரு அழகு வாய்ந்த புத்தர் சிற்பம் கிடைத்திருப்பது குறிப்பிடத்தக்கசிறப்புக்குரியதாகும்.

இக்கண்டுபிடிப்பின் மூலம், சென்னையிலோ அல்லது சென்னைக்கு அருகிலோ பௌத்த ஸ்தூபாஒன்று இருந்திருக்கலாம் என்ற ஊகம் மேலும் வலுப்பெறுகிறது.

# இயற்கை அன்னையின் கோபம்

இயற்கை அன்னையும் மற்ற அன்னையரைப் போலத்தான். பிள்ளைகளின் தவறைப் பொறுத்துக் கொள்ளக் கூடியவள்தான். ஆனால் குழந்தைகளின் குறும்பு எல்லை மீறும்போது இயற்கை அன்னை அவர்களைத் தண்டிக்கத் தயங்கமாட்டாள்.

குழந்தைகள் இன்று அன்னையையும் சேர்த்து அழிக்கக்கூடிய அணுகுண்டை வைத்தல்லவா விளையாடிக் கொண்டிருக்கிறார்கள்!

மனிதனுக்கு தான் வாழும் தலைமுறை பற்றித்தான் கவலை. இயற்கை அன்னைக்கோ தமக்குப் பின்னும் வரப் போகும் பல ஆயிரம் தலைமுறைகள் பற்றிய கவலை.

அதனால் அவளது சீற்றங்களை, சமயங்களில் நாம் எதிர் கொள்ளத்தான் வேண்டும்.

இதை புரிந்து கொள்ளாததால்தான் மிகப் பெரிய நாகரிகங்கள் கூட சுவடு தெரியாமல் அழிந்து விட்டன.

மரங்கள் பெருவாரியாக வெட்டப்பட்டதால், பெரும் வெள்ளங்கள் ஏற்பட்டன. பைபிள் இதைக் கடவுளின் கோபம் என்று வர்ணித்தது. இது போலவே பல நாடுகளில் ஏற்பட்ட வெள்ளங்களுக்கு ஆங்காங்கு உள்ள கடவுளின் கோபம் என்ற காரணம் பல புராணங்கள் மூலம் கற்பிக்கப்பட்டன.

அப்பொழுது...

ரோமாபுரியில் ரோமப் பொறியியலின் அற்புதத்தால் மனிதக் கழிவுகள் கண்களுக்கெட்டாத் தொலைவிற்கு எடுத்துச் செல்லப்பட்டன. அவைகள் நகருக்கு வெளியே உள்ள நீர்வழிகளில் கலந்தன. இறந்த உடல்கள் நகருக்கு வெளியே உள்ள திறந்த குழிகளில் வீசியெறியப்பட்டன.

விளைவு ...

ரோம சாம்ராஜ்யமே நாறத்தொடங்கியது; பிளேக் போன்ற கொள்ளை நோய்கள் தலைவிரித்து ஆடின.

எதைச் சுற்றுச்சூழல் அழிப்பு என்று வர்ணிக்கலாம்?

இப்பொழுது இருக்கும் அல்லது வரப் போகும் தலைமுறைகள் இயற்கையின் உதவிப்பெற்று அதோடு இணைந்து வாழ்வும் நம்பிக்கைக்கு அபாயம் விளைவிக்கும் எந்த ஒரு செயலுமே சுற்றுச் சூழல் அழிப்புதான்.

இந்தக் கோலத்தில் பார்த்தால் வேளாண்மை சமுதாயங்களைத் தென்றலுக்கும், தொழில்மயமான சமுதாயங்களை புயலுக்கும் ஒப்பிடலாம்.

உலகப் போர்களுக்கும் பிந்தைய வளர்ச்சி, கூட்டுமுறையற்ற தொழில் நுட்பத்திற்கும் வரைமுறையற்ற உற்பத்திக்கும் ஏகபோக நுகர்தலுக்கும் சமர்ப்பிக்கப்பட்டது. இதனால், மேற்கத்திய முதலாளித்துவ நாடுகளும் கிழக்கு ஐரோப்பிய கம்யூனிஸ நாடுகளும் ஒரே மாதிரி பாதிக்கப்பட்டன. அவை இரண்டின் உற்பத்திக் குறிக்கோள்களிலும் செயல் முறைகளிலும் பலத்த வேறுபாடு இருக்கவில்லை அவை இயற்கையை அள்ள அள்ளக் குறையாத அட்சய பாத்திரமாகக் கருதினர். அவற்றுக்கு கழிவுகள் ஒரு பிரச்சினையாகவே தெரியவில்லை. அவற்றுக்கு இடையே இருந்த ஒரு வேறுபாடு - யார் அதைக் கைப்பற்றுவது என்பதுதான்!

மொத்தத்தில் -

மனிதன் தனது குறுகிய கால நலன்களுக்காக எதிர்காலத்தையே அடகு வைக்கத் துணிந்து விட்டான்.

நாம் விரைந்து செயல்படாவிட்டால் அதை மீட்கவே முடியாது.

'சூழலியல் - ஓர் அறிமுகம்' நூலிலிருந்து.

**சுற்றுச் சூழல் காப்போம் சுகவாழ்வு கொள்வோம்**

## பொதுமக்களுக்கு ஒரு வேண்டுகோள்

# மாண்புமிகு முதல்வர் அவர்களைச் சந்திக்க.....

முதலமைச்சரைச் சந்திப்பதற்குத் தமிழக மக்கள் அனைவருக்கும் உரிமை உண்டு. ஆனால், அவ்வாறு சந்திக்க இயலாத சூழ்நிலைகளில், பொதுமக்கள் தங்களுடைய குறைகளைத் தெரிவிக்க விரும்பினால், கடிதம் மூலம் எழுதி அனுப்பலாம். அவை முதலமைச்சர் அலுவலகத்திலும் மற்றும் முதலமைச்சர் சிறப்புப் பிரிவிலும் முறைப்படி பெறப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும். அந்த மனுக்களின் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை மனுவை அனுப்பியவர்களுக்கு உரிய துறைகள், மனு கிடைத்த முப்பது நாட்களுக்குள் முடியும் என்றோ, முடியாவிட்டால் எதனால் முடியாது என்றோ தெரிவிக்கும்.

முதலமைச்சரை நேரில் சந்திக்க விரும்பும் மக்கள் பிரதிநிதிகள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், மற்றக் கட்சிகளின் தலைவர்கள், தொழில் அதிபர்கள், அதிகாரிகள், அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் முதலமைச்சரின் உதவியாளர்களிடம் நேரம் குறித்துக்கொண்டு, அதன்படி முதலமைச்சரை தலைமைச் செயலகத்திலோ அல்லது வீட்டிலோ சந்திக்க வேண்டுமென்று அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

டி. முருகராஜ், இ.ஆ.ப.,
முதலமைச்சரின் செயலாளர்.

## கவிதைப்போட்டி

கற்பனையும் சிந்தனையும் கைகோத்து நடனமிட அற்புதக் கவி படைக்கும் அனைவருக்கும் நல்வாய்ப்பு;

இதோ தமிழரசின் கவிதைப்போட்டிக்கு அழைப்பு
**'இன்று புதிதாய்ப் பிறந்தோம்'**

– இதுதான் கவித் தலைப்பு
உரிய பரிசுகள் காத்திருக்கின்றன!

உங்கள் கவிதை வந்து சேரவேண்டிய கடைசி நாள் - 15.7.96

உங்கள் படைப்பு, மரபுக்கவிதையாகவோ,
புதுக் கவிதையாகவோ இருக்கலாம்.

வரி வரையறை : 16

வெல்லும் கவிதைகள் வெளியாகும் இதழ்
– விடுதலைத் திருநாள் மலர் (16 .8.1996)

கவிதை அனுப்ப வேண்டிய முகவரி

ஆசிரியர்,
தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம்,
சென்னை 600 002.

## கவிதை மன்னன்

'கார்ல் வில்ஹெம்' (1767-1835) என்பவர் ஜெர்மன் தேசத்தைச் சேர்ந்த புகழ்பெற்ற கவிஞர். அவர் அறிவும் ஆற்றலும் வாய்க்கப்பெற்ற 'க்ரோலின்' என்பவரைத் தன் இருபத்தி நான்காவது வயதில் மணம் செய்துகொண்டார். அவர் அன்றைய தினம் முதற்கொண்டு தம் மனைவியைப் பற்றி 100 வரிகள் கொண்ட பாடலைத் தினந்தோறும் இயற்றுவதாக உறுதி கொண்டார். இவ்வாறு கரோலின் அவருடன் வாழ்ந்த 38 ஆண்டுகள் நாள் தவறாமல் எழுதி முடித்திருக்கிறார். அவள் காலமானதற்குப் பின்னும் தொடர்ந்து ஆறு ஆண்டுகள் அவர் எழுதியிருக்கிறார். அவளைப்பற்றி அவர் எழுதிய மொத்த வரிகள் 16,06,000 ஆகும்.

ஆசிரியர் மடல்

# தமிழரசு இப்போது உங்கள் கரங்களில் புதுப்பொலிவுடன்

இலக்கிய நயத்துடன்
நலத்திட்ட விளக்கங்கள்,
கருத்துக் கருவூலங்களுடன்,
அறிவியல் செய்திச் சிதறல்கள்.
அறிந்து கொள்ளும் ஆர்வம்
தெரிந்து கொள்ளும் ஊக்கம்
மயிலிறகால் வருடல்; மலர்க்கொத்தாய் மணம் வீசல்,
அரசுத் திட்டங்களில் புதிய முயற்சிகள்
புத்தம் புது நுட்பங்கள்
எல்லாத் துறைகளிலும் சாதனைகள் இனி இலக்கியமாகும்.
வாசித்தவர்கள் நேசித்தவற்றை எழுத
தமிழரசு வாசகர் பக்கங்களுக்கும் வழிவிடும்.
எனவே நெஞ்சில் பதிந்தவற்றைக் காகிதத்தில் நீங்கள் பதியம் போடலாம்
தமிழரசு களமாகும்.
மண்ணுக்கு மருதாணி பூசி அழகு பார்க்கும் உழவர்களும்
வயலில் வியர்வையை விதைக்கின்ற பெண்களும்
பயன்பெறும் வகையில் வளத்தைப் பெருக்க
உடல்நலத்தைப் பேண, புதிய நோக்கில் தமிழரசு
திட்டங்களில் தூய வளர்ச்சி இழையோட
பயனாளிகளின் நேர்காணல்கள்,
அனுபவப் பகிர்வுகள் தமிழரசில் இடம் பெறும்.
விழிப்புணர்வைத் தூண்டுகின்ற சிறுகதைகளைத்
தமிழரசு இடுப்பில் ஏற்றிக் கொண்டு இனிதே நடைபோடும்

அழகிய ஒரு கருத்தை இனிப்பு உருண்டைக்குள் விதைக்கும்
முயற்சி தொடரும்.
மொழிப்பயிற்சியையும். இலக்கிய முயற்சியையும் வளர்க்கும்
இலக்கை நோக்கி கவிதைப் போட்டிகளும், கட்டுரைப்
போட்டிகளுமாகத் தமிழரசு உங்கள் கைகளில்,
வடிவமைப்பில் நேர்த்தி
உள்ளடக்கத்தில் முதிர்ச்சி
பார்க்கிறபொழுதே மனது நிறைக்கும்.
தமிழரசின் மீது நீங்கள் வைக்கும் விமரிசனக் கனம்
ஆயிரமாயிரம் இதயங்கள் மகிழ அடிப்படை அமைக்கும்.
ஏனென்றால் மக்கள் அனைவரது இதயத்தையும் தாங்கி
பாராட்டப்படவும் சீராட்டப்படவும் மட்டுமன்றி
பயன்படவும் தமிழரசு உங்கள் கைகளில் இப்போது.



ஆசிரியரும் வெளியிடுபவரும் : வெ. இறையன்பு, இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம் , சென்னை - 600 002. தொலைபேசி எண் : 568926, 568927


தூய
பட்டு
தூய
சரிகை
ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ–ஆப்டெக்ஸ்.
கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி


தமிழரசு
பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)/PP-23